
208550


ஆனந்த விகடன்
7.2.45.

JL
M1, N26AV
N.43
208550

ஆனந்த விகடன்

7.2.43




6 FEB 1943
MADRAS

குழந்தைக்கு சரியானபடி
உணவளிப்பதில்
உள்ள சிக்கனம்

கிளாக்ஸோவுக்குப் பாலோ, சர்க்கரையோ அவசியமில்லை. தயாரிப்பதும் வெகு சுலபம். கொதிக்க வைத்த ஜலத்துடன் கலந்து கொடுக்க வேண்டும். எனவே சிக்கனமும், பத்திரமும், தூய்மையும் மிகுந்த, குழந்தைகளுக்கான சிறந்த ஆகாரம் இதுவே.

எல்லா பெரிய வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**இதன் விலையை முதலாளிகள் உயர்த்தவில்லை**


Sunshine Glaxo

ஸன் ஷைன்

**கிளாக்ஸோ**

6S

## விருத்தாப்பியத்தில் மன அமைதி



**நேஷனல் இந்தியன் லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிட்.**


ஹெட் ஆபீஸ் :
மெர்கன்டைல் பில்டிங்ஸ்,
9, லால் பஜார், கல்கத்தா.
மதராஸ் ஆபீஸ் :
334, தம்புசெட்டிதெரு, மதராஸ்

**தூத்துக்குடி ஆபீஸ் :-**
253, க்ரேட் காட்டன் ரோட்,
தூத்துக்குடி.

**ஹைதராபாத் ஆபீஸ் :-**
1101, சுல்தான் பஜார், ஹைதராபாத் (டெக்கான்)

NIL. 6

## தாயே, உன்னுடைய குழந்தை இராத்திரியில் விழித்து எழுந்து அழுகிறதா ?




குளித்தான பிற்பாடு, குழந்தைக்கு தேகமெல்லாம் தூள் பரவும்படி, குடிகூரா டால்கம் தூளைத் (Cuticura Talcum Powder) தூவ, அப்புரம் குழந்தை தூக்கமில்லாமல் விழித்திருக்காது—குழந்தை அப்படித் தூங்கினுல் நீயும் தடுக்கில்லாமல் தூங்கலாம். குடிகூரா டால்கம் (Cuticura Talcum) தூள் எரிப்பு முதலான தோல் நோய்களைச் சாந்தி செய்து மருந்தூட்டி பரிகாரத்தோடு தேற்றுவதனுல் குழந்தையின் தூக்கம் எரிப்பாலும், நமைச்சலாலும் ஒருகாலத்திலும் கெடப்படாது. குடிகூரா டால்கம் தூள் (Cuticura Talcum Powder) வேர்வையைத் தணித்து, உடம்பின் தோலுக்கு உல்லாசத்தையும் வாசனையையும் கொடுக்கும். உலகமுழுதலும் வைத்தியர்கள் குடிகூரா டால்கம் தூளை (Cuticura Talcum Powder) குழந்தைகளுக்கு உபயோகிக்கும்படி சொல்லுகிறார்கள். எரிப்பையும் நமைச்சலையும் தடுப்பதர்க்கு அதைப்போல் ஒன்றும் கிடையாது.

குழந்தையின் குளிப்புக்கு குடிகூரா சோப்புக்கட்டியை (Cuticura Soap) எப்போதும் உபயோகிக்க வேண்டும். இந்தச் சோப்புக்கட்டி தோலை முழுதலும் சுத்திசெய்து, அழகான மேனியோடு வைத்திருக்கும். குடிகூரா தைலம் (Cuticura Ointment) தோலைச் சீக்கிரத்தில் தேற்றி, மருவுகளையும், சொரியையும் சீக்கிரத்தில் தேற்றி சொஸ்தம் செய்யும்.

எல்லா மருந்து கடைகளிலும் பஜார்களிலும் விற்கப்படும்.

உபயோகிக்கும்

**குடிகூரா டால்கம் தூள்**

**CUTICURA TALCUM POWDER**

# இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், நார்த் பீச் ரோட், மதராஸ்

தென்னிந்தியா வெங்கும் கிளை ஆபீஸ்கள்

| | | |
|---|---|---|
| அதிகாரம்பெற்று, வழங்கி, வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் (16-1-43 தேதியில்) | ரூ. | 21,48,580 |
| ரிஸர்வ் பண்டு (16-1-43 தேதியில) | ரூ. | 22,26,400 |
| டிபாஸிட்டுகள் (31-12-42 தேதியில்) | ரூ. | 5,23,71,000 |

N. கோபால அய்யர் (செக்ரடரி).

HARDWARE, STEEL, COPPER & BRASS RODS & PIPES; LEAD, TIN AND ALL NON-FERROUS METALS, TEXTILE STORES, CHEMICAL— FERTILISERS, ELECTRODES, RICE HULLER BLADES: HESSEIN & JUTE, SAWS AND TOOLS, BALL & ROLLER BEARINGS, ANGLES, ROUNDS AND BARS ELECTRIC MOTORS, BELTINGS, BOBBINS, RING TRAVELLERS ETC., LEATHER GOODS ETC., ETC.

*Enquiries to*


**OVERSEAS REPRESENTATIONS,**

Fraser Square,
COIMBATORE.
Phone 98.


159, Narasimharaja Road,
BANGLORE CITY.
Grams : "RISINGSUN"




ராஜா ஸ்னோ பருக்களை போக்கி, அழகை தரும். ஹேர்ஆயில் கூந்தலை விருத்திசெய்யும். கஸ்தூரி சோப் ஆரோக்யம் அழகுதரும் எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.




அன்று வேலைகளை நன்று செய்ய, காலையிலெழுந்தவுடன் அரை குறை தூக்கத்தையும், சோம்பலையும் துரத்தி, உற்சாகத்தையும் ஊக்கத்தையு மளிக்கவல்லது ஒரு கப் காபி அல்லது டீ தான். வாங்கும்போது நரஸூஸ் காபி, டீயை வாங்கத்தவருதீர்கள். அவைகள் எப்பொழுதும் உயர்ந்தவை.




*மற்ற விவரங்களுக்கும், மெயில் ஆர்டர்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.*

**நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி**

ஹெட் ஆபீஸ்:—சேலம்.

MNK. 10 T.

இதை நீங்கள் அவசியம் படிக்க வேண்டும் ! முக்கியமான அறிவிப்பு

## லக்ஷக்கணக்கானவர்களுக்கு இது உதவியளிக்கிறது

பிரிய வாசகர்களே, நான் ஒரு நாட்டு வைத்தியனோ அல்லது இங்கிலீஷ் டாக்டரோ அல்ல. ஆனால், தனது துர்நடத்தைகளின் பலனை அனுபவிக்க நேர்ந்த ஒரு துர்ப்பாக்கியன் நான். கேவலமான எனது கெட்ட செய்கைகளின் பயனாய் எனக்கு இரவில் இந்திரியஸ்கலிதம் ஏற்பட்டு முடிவில் எனது ஆண்மையையே இழக்க நேரிட்டது. நாளுக்கு நாள் நான் மிகவும் பலஹீனமடைந்து வந்தேன். ஹிருதயத்துடிப்பு அதிகரித்தது. அடிக்கடி கிறுகிறுப்பும் மயக்கமுமாக வந்தது. அந்தரங்கமாக, ஆயிரக்கணக்கான டாக்டர்களிடம் சிகிச்சை செய்து கொண்டு பார்த்தேன். ஒருவித குணமும் ஏற்படவில்லை. இந்த துன்பமயமான வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்று நான் நினைக்க ஆரம்பித்தேன். அதிர்ஷ்ட வசமாக கைங்கரிய நிமித்தம் நான் பெஷாவர் செல்ல நேர்ந்தது. அங்கு ஒரு மஹாத்மாவைச் சந்திக்கும் பாக்யம் எனக்குக் கிடைத்தது. சோகமே உருவாகத் தோன்றிய என் மேல் அவர் கருணை கொண்டு என்னைப்பற்றி விசாரித்தார். சஞ்சலத்தில் மூழ்கிக் கிடந்த என் மனம் மஹாத்மாவிடம் உண்மையைச் சொல்லும்படி தூண்டியபடியால் அவரிடம் ஒன்றையும் மறைக்காமல் என் தேகநிலையின் உண்மையைத் தெரிவித்தேன். மஹாத்மா என் மேல் பச்சாதாபம் கொண்டு உள்ளுக்கு ஒன்றும் வெளியே பூசுவதற்கு ஒன்றுமாக இரு மருந்துகள் தயாரிக்கும் முறையை எனக்குக் கற்பித்தார். அவர் போதனையின்படி அவர் முன்னிலையிலேயே மூலிகைகளைச் சேகரித்து இந்த இரு மருந்துகளையும் தயாரித்தேன். பிறகு சாப்பிட ஆரம்பித்தேன்.

பிரிய வாசகர்களே ! நான் கடவுள் சாட்சியாகக் கூறுகிறேன், 7-வது தினமே எனக்கு இளமை திரும்பி விட்டது. எனது ஆண்மையைப் பற்றி நான் இப்பொழுது பெருமை கொள்கிறேன். சில டோஸ்கள் சாப்பிட்டதுமே இந்திரிய ஸ்கலிதம் நின்றுவிட்ட போதிலும், மஹாத்மா சொன்னபடி நான் மருந்தை 21 தினங்கள் சாப்பிட்டேன். என்னால் தினம் 4 சேர் பால் ஜீர்ணிக்க முடிந்தது. என் கண்கள் பிரகாசம் பெற்றன. முகத்திற்கு அலாதி தேஜஸ் ஏற்பட்டது. தேகத்தில் புதிய பலமும், வீரிய சக்தியும் உண்டாயிற்று. ஊருக்குத் திரும்பியதும் இதை நான் அநேகருக்குக் கொடுத்துப் பரீக்ஷித்ததில் ஆண்மையின்மையைக் குணமாக்குவதில் இது ஓர் நிகரற்ற டானிக் என்பது ருஜுவாயிற்று.

பொதுமக்களின் நன்மைக்காக இதை நான் விளம்பரம் செய்கிறேன். ஆண்மையை இழந்து, ஆயிரக்கணக்கில் செலவழித்தும் குணம் பெறாதவர்கள் இதை உபயோகித்தால் உடனே குணம் பெறுவது திண்ணம். இதன் விலையோ மிகவும் குறைவு. அயல்நாடுகளிலிருந்து வரும் ஆர்டர்களுடன் முன் பணம் அனுப்பவேண்டும்.

டாக்டர் V. N. சாமாராவ், மதராஸ் : "நரம்புத் தளர்ச்சியினால் அவதிப்பட்ட என் நோயாளி ஒருவர் இம்மாத்திரைகளால் பூர்ண குணமடைந்தார்.

**இளமை யளிக்கும் மாத்திரைகள் 21 தினங்களுக்கு ... ரூ. 3/-**
**மேலே பூசுவதற்குத் தைலம் ,, ... ரூ. 3/8/-**

இதில் ஹானி பயக்கத்தக்க சரக்குகளின் சேர்க்கை கிடையாது. கிழவர்கள், யுவர்கள் யாவருக்கும் ஏற்றது. ஆர்டர்களை சீக்கிரம் கவனிக்க தயவு செய்து ஆங்கிலத்தில எழுதுங்கள்.

குணத்திற்கு உத்தரவாதம் : இந்த மருந்தினால் உங்களுககு குணமேற்படா விட்டால் மருந்தின் கிரயத்தை நான் வாபஸ் செய்கிறேன். ஆயிரக்கணக்கான டாக்டர்கள் இதை சிபாரிசு செய்கிறார்கள். எல்லாப் பருவங்களிலும் அற்புத குணம்.

முக்கிய அறிவிப்பு : நரம்புத் தளர்ச்சி, ஆண்மையின்மை இவைகளால் வருந்துபவர்களுக்கு மட்டும் தான் இம்மருந்து. மேக வியாதிகளினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அற்புதமான நிவாரணி. மேலும் இது நல்ல ரத்த விருத்தி யளிக்கிறது.


விவரங்களுக்கு : THE MANAGER,

**DARUL - SHAFA - GOLIAN (Regd.) A.V.M., BATALA, PUNJAB.**

மானேஜர், டார் உல்-ஷாபா-கோலியன் (ரிஜிஸ்டர்டு) A.V.M., படாலா, பஞ்சாப்.



## குழந்தையை சரிவரப் பராமரிப்பதே பெற்றோர்களின் முக்கிய கடமை



# vita-milk

**குழந்தைகள், பலவீனர்களுக்கு சிறந்த பால் ஆகாரம்**

மேல் நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெற்று வந்துள்ள நிபுணர்களின் மேற்பார்வையில் தூய்மையான, புத்தப் புதிய பசும் பாலைக் கொண்டு எங்கள் உற்பத்தி சாலைகளில் கைபடாமல் தயாரிக்கப் படுகின்றன.

வைத்திய சாலைகள், பிரசவ ஆஸ்பத்திரிகளில் ஏராளமாக உபயோகிக்கப் படுகின்றன.

டாக்டர்களால் வெகுவாகச் சிபாரிசு செய்யப்படுவது

— பிரபல வியாபாரிகளால் எங்கும் விற்கப்படுகிறது. —

ஷேர்களை விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை

பெரிய மூலதனத்துடன் நடத்தப்படும் ஒரு கம்பெனியின் தயாரிப்பு !

**தி நேஷனல் நூட்ரிமெண்ட்ஸ் லிமிடெட்**

போன் : கல்கத்தா 1464-65
தொழிற் சாலைகள் :
டம் டம் (கல்கத்தா) பெனாரஸ்.

தந்தி : "ஆர்யோபிளான்ட்ஸ்"
தலைமை ஆபீஸ் :
12, சௌரிங்கி ஸ்கொயர், கல்கத்தா.





*LOCAL AGENTS :*


T. T. KRISHNAMACHARI,

111, ARMENIAN ST., :: :: MADRAS





S.1. 1




மாலை 18] [மணி 6

*Ananda Vikatan*

பிப்ரவரி 7

எல்லோரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன் றறியேன்
பராபரமே

ஆட்டம் கண்டு விட்டது! (படம்) ... 10
தோல்விப் பிரசங்கம் 11
ஆட்டமா? திண்டாட்டமா? (படம்) ... 14
அரசியல் உலகம் ... 15
லோக சஞ்சாரம் ... 18
துக்கடா ... 20
யுத்த டயரி ... 23
புகைப் படச் சித்திரம் 27
திண்ணைப் பேச்சு ... 29
வேம்புவின் பிரசங்கம் 33
"மகா யோக்கியர்கள்!!" ... 40
பேஷான சமையல்! 43
கஷாங்கா ... 46
விகடன் பேச்சு ... 48
துப்பறியும் சாம்பு ... 49
"பகுத்தறிவு" 324 —
"பகுத்தறிவு" 318 முடிவு

குறிப்பு:—"ஆனந்த விகட"னில வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் காணப்படும பெயர்களெலலாம் கறபனைப பெயர்கள். அவை யாரையும் குறிப்பிடுவன வலல.

# ஆட்டம் கண்டு விட்டது!






# தோல்விப் பிரசங்கம்

நல்ல நிலைமையிலுள்ள போது சிலர் கடவுளை நினைப்பது கிடையாது. ஏதாவது பொறுக்க முடியாத துன்பம் சம்பவித்து விட்டால் அப்போதுதான் கடவுளைப் பற்றி நினைக்க ஆரம்பிப்பார்கள். 'எல்லாம் அவன் செயல்' என்று பகவான் மீது முழு பாரத்தையும் போடுவார்கள். 'விதிப் பயன்' என்று வேதாந்தம் பேசுவார்கள். பிறத்தியாருக்கும் இந்த 'விதிப் பயனை'ப் போதிக்கக் கிளம்புவார்கள்! இந்த நிலைமைக்குத்தான் நாஸித் தலைவர்கள் இப்போது வந்திருக்கிறார்கள்.

சென்ற வாரம் ஜெர்மனியில் நாஸிகள் அதிகாரத்துக்கு வந்த பத்தாவது வருஷ தினக் கொண்டாட்டம் பெர்லின் நகரத்தில் கொண்டாடப் பட்டது. ஜெர்மனியில் மும்மூர்த்திகளாக விளங்கும் ஹிட்லர், கோயரிங், கோயபெல்ஸ் மூவரும் இந்த வைபவத்துக்காகப் பிரத்தியேகப் பிரசங்கம் புரிந்திருக்கிறார்கள். பிரசங்கமென்றால், சாதாரணப் பிரசங்கம் அல்ல. முதல் தரமான 'தோல்விப் பிரசங்கம்' என்றே சொல்ல வேண்டும்.

முன்பெல்லாம் ஹிட்லர் முதலானவர்கள் பேசுகிறார்களென்றால், ஒரே ஆர்ப்பாட்டமாக இருக்கும். போர்முனையில் ஜெர்மன் துருப்புகள் எப்படி வெற்றி மேல் வெற்றி யடைந்து வருகிறார்களென்று ஹிட்லர் முதலானவர்கள் விவரித்துக் கொண்டே போவதும், அதைக் கேட்டு ஜெர்மன் ஜனங்கள் உற்சாகம் தலைக்கேறிக் கூத்தாடுவதுமுண்டு. 'தோல்வி' என்ற வார்த்தையை அவராவது அவருடைய மந்திரிகளாவது உச்சரித்து அறியார்கள்.

இப்பேர்ப்பட்ட நாஸித் தலைவர்கள்தான் சென்ற வாரமும் பிரசங்கம் செய்திருக்கின்றனர். ஆனால், பழைய ஜம்பப் பேச்சுகளெல்லாம் இதில் காணாமல் மறைந்து போய்விட்டன. பழைய வீர வார்த்தைகளெல்லாம் மலையேறி விட்டன. "ஹிட்லர் முதலியவர்கள்தானா இப்படிப் பேசுகிறார்கள்!" என்று நாம் ஆச்சரியப் படும்படி யிருக்கிறது.

இப்போதுதான் நாஸிகள் ரஷ்ய முனையில் அடைந்து வரும் தோல்வியை முதல் தடவையாக ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். ஒப்புக்கொண்டதோடு மட்டுமல்லாமல், "எல்லாம் தலைவிதி! விதி குறுக்கிட்டு விட்டது! கடவுளுடைய சோதனை!" என்று வேதாந்தப் பேசிப் புலம்பி யிருக்கிறார்கள். பீல்டு மார்ஷல் கோயரிங் முன்னெல்லாம், "இதோ வெற்றி, அதோ வெற்றி!" என்று நிச்சயமாகக் கூறிக்கொண்டு வந்தது போக, இப்போது எப்படித் திரும்பிவிட்டார், பாருங்கள்!

"ஜெர்மன் பொது ஜனங்கள் உடனேயே வெற்றியை எதிர்பார்ப்பது கூடாது. அவ்வளவு சீக்கிரமாகவும் சுலபமாகவும் வெற்றி கிடைத்து விடாது. விதிப் பயன் என்று ஒன்று இருக்கிறதல்லவா? அதுதான் நமக்குக் குறுக்கே வந்து நிற்கிறது. இன்

னும் அநேக சோதனைகளிலிருந்து நாம் தேறி மீண்டு வந்தால்தான் விதி நமக்கு வழி விடும்!'' என்று சொல்லி, ஏற்கெனவே உறுதி தளர்ந்துபோன ஜெர்மன் ஜனங்களின் மனதை இன்னும் தளர்ந்து போகச் செய்து விட்டார்.

மேலும், ரஷ்யாவோடு பகைத்துக்கொண்ட அசட்டுத்தனத்தை மறைப்பதற்கு இவர்கள் புதிய காரணம் ஒன்று சிருஷ்டித்துக் கூறுகிறார்கள். அதாவது, ரஷ்யா மீது போர் தொடுக்காமலிருந்திருந்தால், அநாகரிகமான பொதுவுடைமையின் கீழ் ஐரோப்பா முழுவதும் அடிமைப்பட நேர்ந்திருக்குமாம்! இவ்விதம் திடீரென நாஜிகள் பொதுவுடைமையின் அபாயத்தை இப்போது வற்புறுத்தக் காரணம் இருக்கிறது.

பிரிட்டன் - அமெரிக்கா இவற்றை விட்டு ரஷ்யாவை பிரித்து விட எதிரிகள் இந்தக் கடைசிப் பிரயத்தனம் செய்து பார்க்கிறார்கள். பொதுவுடைமைக்காரர்களான இதே ரஷ்யர்களுடன் ஹிட்லர் உறவாடிய காலமும் உண்டு. அப்போது பிரிட்டனை எதிர்ப்பதற்காக நாஜிகள் இன்று பொதுவுடைமைக்காரர்கள் என்று கருதப்படும் ரஷ்யர்களோடு சமாதானம் செய்து கொண்டது போல், இப்போது ரஷ்யர்களைத் தாம் எதிர்ப்பதற்கு பிரிட்டன் அமெரிக்கா இவற்றுடன் சமாதானம் செய்து கொள்ளவும் ஹிட்லர் முயற்சிப்பதாகவே கூறலாம். இந்த முயற்சிக்கு ஆதரவாக கொயரிங் தமது பேச்சில், ''அநாகரிகம் மிகுந்த பொதுவுடைமை வாதிகளோடு சமாதானம் என்பது சாத்தியமே கிடையாது. மற்றப்படி கௌரவமுள்ளவர்களோடு வேண்டுமானால் இது சாத்தியமாகும்!'' என்று தெரிவித்திருப்பதால், எதிரிகள் ரஷ்யாவுக்கு எதிராக இப்போது 'கௌரவமுள்ள' பிரிட்டன் - அமெரிக்காவுடன் சமரசம் செய்து கொள்ளக் கூடத் தயாராக இருப்பது வெளிப்படுகிறது.

ஒருவருக்கு எதிராக இன்னொருவருடன் சமாதானம் செய்து கொள்வதும், பின்னால் சமயம் வந்தபோது தன்னுடன் சமாதானம் செய்து கொண்டவர்களையே எதிர்ப்பதும் நாஜிகளுக்குப் புதிய விஷயமல்ல. பிரித்துத் தனித் தனியாக எதிர்த்து வெற்றி பெறலாமென்று அவர்கள் எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆனால் நாஜிகளின் இந்தக் கடைசி ஆவலுக்கும் நேச நாடுகள் இடம் கொடுக்க மாட்டாவென்பதில் சந்தேகமில்லை. முன்னுக்குப் பின் முரணாகவும், பகைவர்களிலேயே நல்லவர்கள் கெட்டவர்களென்றும் நாஜித் தலைவர்கள் பாகுபாடு செய்ய வேண்டிய அவசியம் என்ன நேர்ந்ததென்று பார்த்தால், ரஷ்ய முனையின் கடும் எதிர்ப்பு தான் என்பது வெளிப்படும்.

ரஷ்யர்களிடம் அகப்பட்டுக் கொண்ட அச்சுப் படை, இப்போது குற்றுயிரான நிலைமையில் இருக்கிறது. ரஷ்யர்கள் பிறர் உதவி இல்லாமலேயே, இவ்வளவு தீவிரமாக எதிர்த்துப் பழி வாங்குவார்களென்றும் நாஜித் தலைவர்கள் சொப்பனத்தில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். ஜெர்மன் துருப்புகள் இப்போது ரஷ்ய முனையில் பலியாகி வரும் கணக்கைப் பார்த்தேதான் ஹிட்லரும் கொயரிங்கும் இவ்வாறு கதிகலங்கியிருக்க வேண்டும்.

சுமார் இரண்டாயிரம் மைல் நீளமுள்ள போர் முனையில் நாஜிகள் ஆயிரக் கணக்கில் தினம் தினம் பலியாகி வருகிறார்கள். லட்சக் கணக்கில் கைதி செய்யப்படுகிறார்கள். ஸ்டாலின்கிராட் முனையில் வளைத்துக் கொள்ளப்பட்ட லட்சக் கணக்கான ஜெர்மன் துருப்புகளின் கதி அதோகதியாகி விட்டது. இந்த யுத்தம் ஆரம்ப



னதிலிருந்து, இது போன்று ஜெர்மானியர்களுக்கு எங்குமே எதிர்ப்பும் நாசமும் விளைந்தது கிடையாது. அடுத்த வசந்த காலத்துக்குள் நாஜிப் பூண்டு வேரோடு மறைந்து விடுமென்பதற்கு இப்போதே வேண்டிய அறிகுறிகள் தென்படுகின்றன.

''ரஷ்ய ஜெர்மன் யுத்தம் போல ஒரு யுத்தமும் நடந்ததில்லை!'' என்று நாஜிகளே ஒப்புக் கொள்கிறார்கள். ரஷ்யாவுக்கு எதிராக நேச நாடுகளிடையே ஏதாவது பிளவு உண்டு பண்ணி விட்டால் இனிமேல் தலைதப்ப முடியாதென்ற முடிவுக்கு வந்தே ஹிட்லர் 'பொதுவுடைமை'யைக் கிளப்பியிருக்கிறார். அதோடு, இந்த யுத்தத்தில் வெற்றி தோல்வி என்பது எவருக்கும் ஏற்படாதென்று தமக்குத் தாமே மனதைத் தேற்றிக் கொண்டிருக்கிறார். பின்னால் நிச்சயம் தமக்குத் தோல்வி தான் ஏற்படுமென்று எதிர்பார்த்து இப்போதே அதற்கு சமாதானம் தேடிக் கொண்டு விட்டார்!

நாஜித் தலைவர்கள் பிரசங்கத்தில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில். அமெரிக்க பிரிட்டிஷ் எதிர்ப்பைப் பற்றி, அவர்கள் ஒன்றுமே பிரஸ்தாபிக்காதது தான். வடக்கு ஆப்பிரிக்காவில் நடக்கும் சண்டையைக் கூட அவர்கள் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பிரிட்டிஷ் - அமெரிக்கப் போரிடும் சக்தி தங்களை எட்டிக்கூடப் பார்க்கவில்லையென்பது போல், எதிரிகள் அலட்சியம் செய்கிறார்கள்.

ஆங்கிலோ - அமெரிக்காவினால் தமக்கு அபாயம் இப்போதைக்கு ஏற்படாதென்று நாஜிகள் கவலையற்று இருப்பதாகவே இந்த அலட்சியம் காட்டுகிறது. முழுக்க முழுக்க ரஷ்ய அபாயத்தை மட்டிலும் கூறி மரியாதைக்காவது ஆங்கிலோ - அமெரிக்க அபாயத்தைக் குறித்து அவர்கள் பேசாமல் விட்டதேன்?

அட்லாண்டிக் கடலில் மகாநாடு, கானடாவில் மகாநாடு, வடக்கு ஆப்பிரிக்காவில் மகாநாடு, கஸாபிளாங்காவில் சந்திப்பு, துருக்கியில் சர்ச்சில் விஜயம் இப்படி பிரிட்டனும் அமெரிக்காவும் மகாநாடுகளிலேயும் பேச்சுக்களிலேயும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்தம் இன்னும் முடிந்தபாடாக இல்லாதபோது, யுத்தத்துக்குப் பிறகு எந்த நாடுகளுக்கு எப்படிச் சுதந்திரம் யார் மூலம் கொடுக்கலாமென்று விவாதிக்கிறார்கள். கொடுக்க வேண்டியவர்களுக்கு சுதந்திரத்தை ஒத்தி வைத்து சுதந்திர விஷயத்தைக் குழப்புகிறார்கள். அநாவசியமான சந்தேகங்களை இழுத்து விட்டுக்கொண்டு ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிரிட்டனும் அமெரிக்காவும் இவ்வித விஷயங்களில் மூச்சு விட அவகாசம் இல்லாமல் ஈடுபட்டிருப்பது தான், எதிரிகளின் அலட்சியத்துக்குக் காரணமாகவும் இருக்க வேண்டும்.

பார்க்கப் போனால் இந்த அரிய சந்தர்ப்பத்தில் தான் பிரிட்டனும் அமெரிக்காவும் ரஷ்யர்களுக்கு உதவியாக நாஜிகளைப் பின்னால் பலமாகத் தாக்க வேண்டும். எதிரிகள் இப்போதுதான் பலங் குறைந்து சோர்ந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்பது அவர்களுடைய ''தோல்விப் பிரசங்க''த்திலிருந்து வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. ஆகவே, எதிரிகளை வென்று யுத்தத்தையும் சீக்கிரத்தில் முடிக்க வேண்டுமானால், அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இதைத் தவிர வேறே நல்ல தருணம் கிடைக்கப் போவதில்லை. இந்த சந்தர்ப்பத்தைக் கை நழுவ விட்டால், நாஜிகளை எதிர்க்க இடையில் வந்த ரஷ்யாவுக்குத்தான் கீர்த்தி முழுவதும் போய்ச் சேர்ந்து விடும்.



ஆட்டமா? இஸ்டாட்டமா?




ஆகாய மார்க்கத்தில் கல்கத்தாவை நோக்கித் தாவினேன். நான் தாவிய வேகத்தில் அந்த நகரத்தின் மீது மட்டில் ஜப்பான் விமானம் ஏதாவது பறந்திருந்தால், நிச்சயம் அது என் வாலில் அடிபட்டுக் கீழே வீழ்ந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

கீழே குதித்த இடம் கங்கைக் கரையாக இருந்தது. கரையில் நின்று சில முஸ்லிம்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்களை நெருங்கி, "துருக்கியிலிருந்து வந்த பத்திரிகை தூது கோஷ்டியை எங்கே பார்க்கலாம்?" என்று கேட்டேன். "துருக்கிப் பத்திரிகை கோஷ்டியா? ஹூம்?" என்று கேட்டுவிட்டு அவர்கள் சரேலென்று ஓடிப்போய் விட்டார்கள். "சரிதான், இவர்கள் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்கள் போலிருக்கிறது! அதனாலேயே பெயரை கேட்ட உடனேயே கம்பி நீட்டி விட்டார்கள்!" என்று தெரிந்து கொண்டு திரும்பிப் பார்த்தேன்.

"அப்பா! என்ன அழகு! என்ன அழகு! நதி யென்றால் இது அல்லவா நதி!" என்ற பேச்சுக் குரல் கேட்டது.

துருக்கிப் பத்திரிகை கோஷ்டிக்காரர்கள் ஒரு படகில் ஏறி கங்கையைக் கடந்து பார்த்துவிட்டுத் திரும்பிக் கரையேறிக் கொண்டிருந்தனர். கோஷ்டியிலிருந்தவர்கள் என்னைக் கண்டதும் ஆச்சர்யப்பட்டு, உற்றுப் பார்த்தனர்.

"கால்சட்டை போட்டுக்கொண்டிருக்கிறதே!" என்றார் ஒருவர்.

"தலையில் குல்லாயைப் பார்!" என்றார் வேறொருவர்.

"இதற்கு நோட்டு புஸ்தகம் ஏது?" என்று ஒருவர் கேட்டார்.

தூது கோஷ்டியின் தலைவர் ஜனுப் ஆட்டே என் அருகில் வந்து வாலைக் கையில் எடுக்கும் வரையில் பேசாமலிருந்து, "குட் மார்னிங், ஜனுப் அட்டே! இல்லை இல்லை ஆட்டே, இல்லை இல்லை அடே... ஆடே!" என்று பெயரை உச்சரிக்க முடியாமல் நான் தவித்ததைப் பார்த்து, "அடே! இது பேசுகிறதே!" என்று கோஷ்டித் தலைவர் ஆச்சரியப்பட்டார். பிறகு அவர் தம்முடைய பெயர் ஆட்டே என்று கூறினர்.

"நான் யார் என்று தெரிந்தால், என் பேச்சைக் கேட்டு நீங்கள் ஆச்சரியப் பட்டிருக்க மாட்டீர்கள்!" என்று சொல்லி விட்டு, நான் யார் என்பதைத் தெரிவித்தேன்.

"ஓஹோ! அப்படியா சமாசாரம்! நீயும் எங்களைப் போல் பத்திரிகை நிருபர்தானு? ரொம்ப சந்தோஷம்! நாங்கள் இது வரையில் எவ்வளவோ வேடிக்கைகளெல்லாம் பார்த்தோம். ஆனல் நீ பேசியதுதான் எனக்குப் பெரிய வேடிக்கையாகி விட்டது!" என்றார்.



"என்னுடைய பழக்கம் உங்களுக்கு ஏற்படாமலிருந்ததுதான் வேடிக்கையாக உங்களுக்குத் தோன்றக் காரணமாயிற்று. இனிமேல், சகஜமாகப் போய் விடும்!" என்றேன்.

"இது சரிதான்! இருந்தாலும், இந்த நாடு எவ்வளவு அற்புதமான நாடு என்பது இப்போதுதான் எங்களுக்கும் தெரிகிறது. ஆஹா! என்ன வனம்! என்ன வளம்! எப்பேர்ப்பட்ட அன்பான ஜனங்கள்!" என்று ஜனுப் ஆட்டே புகழ்ந்தபோது, அவருடைய பேச்சை நான் வந்த காரியத்தில் திருப்பினேன்.

"இந்தியாவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன்.

"எங்கே போனாலும் இப்படியேதான் என்னைக் கேட்கிறார்கள். இருந்தாலும் சொல்லுகிறேன். தேசம் ரொம்ப நல்ல தேசம்; ஜனங்களும் நல்ல அன்பான ஜனங்கள்!" என்று முன்பு சொன்னதையே திருப்பிக் கூறினார்.

"நீங்கள் மட்டுமென்ன, அன்பான ஜனங்கள்தான்! உங்கள் தேசமும் நல்ல தேசம்தான். ஆனால், உங்களுக்கும் எங்களுக்கும் அரசியல் வித்தியாசம்"...என்றதும், மிஸ்டர் ஆட்டே காதைப் பொத்திக் கொண்டார்.

"அப்பா அப்பா! அரசியல் வேண்டாம். அதைப் பற்றி ஏதாவது கேட்டு என்னை வம்பில் இழுத்து விடாதே! நாங்கள் இந்திய சர்க்காரின் அழைப்பின் மீதே வந்தோம். 'ஏண்டாப்பா இவர்களை அழைத்தோம்' என்று இந்திய சர்க்கார் கருதும்படி நாங்கள் ஒன்றும் சொல்லமுடியாது" என்றார்.

"நீங்கள் வந்த நோக்கம் என்ன?" என்று கேட்டேன்.

"நிலைமையைத் தெரிந்து கொண்டு போவதற்குத் தான். அபிப்பிராயம் சொல்வதற்கல்ல!" என்றார்.

"பொதுவாக, சொல்லக் கூடியதைச் சொல்லக் கூடாதா?" என்று தூண்டிக் கேட்டேன்.

"பேஷாகச் சொல்லுகிறேன்! நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பம். உங்களுக்குள் இருக்கும் சச்சரவுகள், பூசல்கள் முதலியவற்றை யுத்தம் முடியும் வரையில் ஒத்தி வைத்து விட்டு, தேச நன்மையை முதலில் கவனிக்க வேண்டும்!" என்றார்.

"இப்படியெல்லாம் எங்களில் யார் செய்ய மாட்டேனென்று சொல்லுகிறார்கள்?" என்று கேட்டேன்.

ஜனுப் ஆட்டே, சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து விட்டு, "ஏன், 'முஸ்லிம் லீக்' என்ற கட்சியைச் சேர்ந்தவர்கள்தான்!" என்றார்.

"அவர்கள் வேறே என்ன சொல்கிறார்கள்? தேசத்தைத் துண்டு போடத்தானே சொல்கிறார்கள்!" என்று நான் கூறவும்,

"அத்தக் குறும்புக்காரன் நீ! அந்தப் பாகிஸ்தானத்தைத் தான் நான் இப்போது கிளப்பக் கூடாதென்று பொதுவாகப் புத்திமதி கூறினேன். மேலும், இந்த நாட்டில் முஸ்லிம் லீக் தொட்டதற்கெல்லாம் மதத்தைச் சம்பந்தம் படுத்திப் பேசுகிறது. நாங்கள் எல்லாம் இதற்கு நேர் விரோதம். முதலில் தேசம், அப்புறம் தான் மத விஷயம். இந்த மாதிரி நாங்கள் சொல்லப் போகத்தான் சில லீக் காரர்களுக்கு எங்கள் மீது கோபம் வந்து விட்டது. கிலாபத் இயக்கம் நடந்த போது இந்திய முஸ்லீம்கள் உதவி செய்ததை மறக்கக் கூடாதென்று சிலர் எடுத்துக் கூறினார்கள். 'முஸ்லிம்களென்ன, அந்த இயக்கத்தில் ஹிந்துக்கள் கூடத்தான் உதவி செய்தார்கள். ஆகையால் ஹிந்துக்களுக்கும் நாங்கள் கடமைப் பட்டவர்கள்தான்!' என்று பதில் கூறினேன். போகுமிடங்களிலெல்லாம், முஸ்லிம் லீகர்கள் இந்த மாதிரியெல்லாம் ஏதாவது கேட்டு வைத்து விடுகிறார்கள். நாங்கள் நியாயமாக பதில் சொன்னால் அவர்களுக்கு வருத்தம் உண்டாகி விடுகிறது. அப்பா! இந்த லீகைப்போல் ஒரு சிறு பிடிவாதக் கட்சியை நான் பார்த்ததேயில்லை. ரஷ்யாவிலும் சீனாவிலும் தான் முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த தேசங்கள் தான் தாய் நாடு. அங்கேயெல்லாம் இந்த யுத்த சமயத்தில் தேசப் பிரிவினைப் பேச்சே கிளம்பவில்லை. இதை முஸ்லிம் லீகர்கள் அறிந்து கொண்டு, முதலில் தேச நன்மையைக் கருத வேண்டும்!" என்றார்.

"நீங்கள் சொல்வதெல்லாம் ரொம்ப சரிதான். இந்த புத்திமதியை லீகர்கள் ஏற்றுக் கொள்ளும்படி ஏதாவது செய்யக் கூடாதா?" என்று கேட்டேன்.


"நான் முஸ்லிம் லீகர்களுக்காக இங்கே வரவில்லை. ஆகவே, அவர்களுக்காகப் பிரத்தியேகமாக ஒன்றும் நாங்கள் செய்வதற்கில்லை. மேலும் இந்திய நிலைமையைத் தெரிந்து கொண்டு போகவே வந்தோம். இந்தக் காரியம் அநேகமாக முடிந்து விட்டது...!" என்றார்.

"சிறையில் காங்கிரஸ் தலைவர்களைப் பார்த்தால் உண்மை இந்திய நிலைமை நன்றாகத் தெரியுமே!" என்றேன்.

"உஷ்! தலைவர்கள் சிறையிலிருப்பதால் ஏற்பட்ட நெருக்கடியை வெளியே பார்த்தாலே தெரிகிறது. மேலும், உங்கள் தலைவர்களைப் பார்ப்பதைப் பற்றி நாங்கள் நிச்சயமாக ஒன்றும் சொல்வதற்கில்லை" என்று சொல்லி விட்டு, "இதோ சென்னைக்குப் புறப்படப் போகிறோம்! நீயும் வருகிறாயா?" என்று கேட்டார்.

"உங்களைச் சென்னைக்கு வரவேற்கத்தான் இங்கே வந்தேன். வரவேற்பு முடிந்து விட்டது. சென்னையில் உங்களை சந்திக்கிறேன்!" என்று சொல்லிவிட்டுத் தாவினேன். நான் தாவுவதைப் பார்த்த கோஷ்டியினர் ஆட்டே யுள்பட அனைவரும் "அடே!" என்று சொல்லி ஆச்சரியப்பட்டது காதில் விழுந்தது.

## பலவந்த நட்பின் பயன்!






### எங்களுக்கும் வேண்டும் !

சுதந்திரம் என்பது கிடைப்பதாக இருந்தால் 'எனக்கு உனக்கு' என்று போட்டி ஏற்படுவது இயற்கையே.

அமெரிக்க ஜனுபதி ரூஸ்வெல்ட் உலக மகா ஜனங்களுக்கு நான்கு வித சுதந்திரம் அளிக்கப்படும் என்று கூறினு ரல்லவா ?

பயப்படாமல் வாழ சுதந்திரம், தேவை என்பது இல்லாத சுதந்திரம், பேச்சு சுதந்திரம், மத சுதந்திரம் ஆகிய இந்த நான்கு சுதந்திரங்களோடு இன்னும் ஒரு சுதந்திரத்தையும் சேர்த்துக் கொள்ளும்படி வாஷிங்டனிலுள்ள ஸ்திரீகள் ரூஸ்வெல்ட்டை கேட்டுக் கொண்டிருக்கிருர்கள். "ஸ்திரீகளுக்கு சுதந்திரம்" என்று ஐந்தாவதாக ஒன்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம். இதை வாஷிங்டனிலுள்ள சர்வதேச ஸ்திரீகள் சங்கம் பலமாக வற்புறுத்தி வருகிறது.

நான்கு சுதந்திரங்களை ரூஸ்வெல்ட் கொடுக்கிற காலத்தில் ஐந்தாவது சுதந்திரம் ஒன்றைத் தாஞ இல்லை என்று சொல்லி விடுவார் !

### புதிய எதிரி

ஜப்பானியர்களை எதிர்த்துச் சளைக்காமல் சீனு போர் புரிவதைப் பார்த்து நாம் தைரியமடைந்து வரும் சமயத்தில், வருந்தத் தக்க சமாசாரம் ஒன்றும் வந்து விட்டது.

சீனுவுக்குப் புதிய எதிரி ஒருவன் தோன்றி யிருக்கிருன். பொருளாதார நிலைமை நாட்டில் மிகவும் கவலைக் கிடமாக இருப்பதால், பஞ்சம் தலை விரித்தாடுகிறதாம். இந்தக் கொடிய பஞ்சம் தாங்க முடியாமல், ஹோனுன் மாகாணத்தில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் பட்டினியால் இறந்து விட்டார்களாம். மாகாணத்தைக் காலி செய்து கொண்டு வெளி மாகாணங்களை நோக்கி ஜனங்கள் ஓடுகிருர்கள். பஞ்சத்துக்குக் குழந்தைகளையும் பெண்களையும் விற்பது அதிகரித்து விட்டது. உணவின்றி ஓடுபவர்கள் துன்பம் மேலிட்டு, விஷ மூலிகைகளைத் தின்று உயிரை மாய்த்துக் கொள்கிருர்கள். பஞ்சம் என்ற கொடிய எதிரியை ஒழிப்பதற்குச் சீனப் பிரமுகர்கள் பிரிட்டன் அமெரிக்கா இவற்றின் பொருளாதார உதவியை எதிர்பார்த்து வேண்டுகோள் விடுத்திருக்கிருர்கள். இந்தப் புது எதிரியைத் தனக்கு அநுகூலமாகப் பயன் படுத்திக் கொண்டு ஜப்பானியர் சீனுவை இன்னும் பலமாகத் தாக்கவும் கூடும். பீரங்கிகள், துப்பாக்கிகளால் மாய்க்க முடியாத இந்தப் பஞ்சத்தை ஒழிப்பதற்கு நேச நாடுகள் உடனேயே தக்கபடி உணவுப் பொருள்கள் உதவி செய்ய வேண்டும். நமக்கு சகோதர நாடாக விளங்கும் சீனுவுக்கு நேர்ந்த இந்த துர்க்கதி நீங்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிருேம் !


### துருக்கி சந்திப்பு

ஒரு இடத்தி லிருந்து இன்னெரு இடத்திற்குத் திடீர்ப் பிரயாணம்செய்வது சர்ச்சிலுக்கு இப்போது தண்ணீர்பட்ட பாடாகி விட்டது. காஸபிளாங்காவில் ரூஸ்வெல்ட்டுடன் பேசிய பிறகு சர்ச்சில் லண்டனுக்குத் திரும்பி விட்டாரென்று நினைக்கப் பட்டது. ஆனுல் திடீரென்று சர்ச்சில் துருக்கியில் தோற்ற மளித்து நம்மை ஆச்சரியப் படுத்தி விட்டார்.

சர்ச்சிலும் அவருடன் ஒரு ராணுவ கோஷ்டியினரும் துருக்கி




# பரந்த வெளியில்



டீயை அனுபவித்து அருந்துவதற்கான சமயங்களில் ஒன்று "பிக்னிக்" கள். குடும்பக் கூட்டமானுலும் சரி, நண்பர்கள் கூட்டமானுலும் சரி, டீக்குத்தான் அங்கு பிரதான இடம். டீ மாத்திரம் கொடுக்கவல்ல ஆனந்தத்தால்தான், நீங்கள் திறந்த வெளியின் அழகையும், களைப்பாறுதலாலுண்டாகும் இன்பத்தையும் அனுபவிக்க முடிகிறது.

☆

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப் பற்றி இங்கிலீஷில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசதாருக்கு அனுப்பினுல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார் : கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



## இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 159

# பெட்ரோலை மிச்சப்படுத்த 15 வழிகள்

## 2 அதிக வேகமாய் ஓடுவது

மணிக்கு 60-மைல் வேகம் ஓடும் மோட்டாருக்கு 40-மைல் வேகம் செல்லும் மோட்டாரைவிட அதிகமான சக்தி வேண்டும். எனவே அதிக பெட்ரோல் செலவாகிறது. 60-மைல் வேகத்தில் பெட்ரோல் செலவானது 40-மைல் வேகத்திற்குவேண்டிய அளவைவிட 35 சதவிகிதம் அதிகம் காண்கிறது. வேகமாய் கிளம்பிச்செல்லவும், நின்ற உடன் துரிதமாய் நகர்ந்து செல்லவும் அதிக சக்தி தேவை. இதற்கு பெட்ரோல் செலவு அதிகரிக்கிறது. சாதாரணமாய் சிக்கனமாய் ஒரு மோட்டாரை பரிபாலிக்கவேண்டுமானால் அதை மணிக்கு 28 முதல் 35 மைல் வேகத்துக்குமேல் ஓட்டவே கூடாது.

பெட்ரோலை மிச்சப்படுத்த 15 வழிகள் என்ற எங்களது துண்டுபிரதிகளை இலவசமாய் ஆங்கிலம், ஹிந்தி, உருது, வங்காளி, மராட்டி, குஜராத்தி, குர்முகி முதலிய பாஷைகளில் வேண்டுவோர் ஹாங்காங் ஹவுஸ், கல்கத்தா என்ற எங்கள் விலாசத்திற்கு மனுச்செய்து பெறலாம்.



## பர்மா-ஷெல்

காலனுக்கு அதிக மைல் போவோம்
கட்டாயம் வெற்றிக்கு உதவி செய்வோம்

B. S. G. K.—39 TM.





[ நமது யுத்த நிருபர் ]

**முன்னேறுகிறார்கள் ருஷ்யர்கள்!**

ஹிட்லர் தலைமயிரைப் பிய்த்துக் கொண்டிருப்பார் என்று இப்போது ஜோஸ்யம் சொன்னால், அது முக்காலும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ருஷ்யாவில் அவர் காலை வைத்தது பெரும் பிழை என்று எத்தனையோ பேர் எத்தனையோ தடவைகளில் சொல்லியிருக்கிறார்கள். அது பிழை மட்டும் அல்ல, பிராணாபாயம் என்பதை அவர் கண்டுகொண்டிருக்கிறார். அதனால் என்ன விளையப் போகிறது என்பதை நினைக்க, அவர் புத்தி மாறாட்டம் அடைந்தாலும் ஆச்சரியமில்லை. பனிக்காலம் பூராவும் இதே வேகத்தில் ருஷ்யர்கள் முன்னேறினால், ஜெர்மனிக்குள்ளேயே அவர்கள் பிரவேசித்து விடுவார்கள் என்று பயந்து, போலந்தில் ஸிக்பிரீட் அரணை அவசர அவசரமாக அவர் பலப்படுத்தி விஸ்தரிக்க ஆரம்பித்திருக்கிறார். ஜெர்மன் மக்களுக்கு அவர் விடுத்த ஒரு பிரகடனத்தில் ருஷ்ய பலத்தைக் கண்டு அவர் எவ்வளவு தூரம் மிரண்டு போயிருக்கிறார் என்பது வெளியாகியிருக்கிறது. ருஷ்யர்களிடம் தோல்வி அடைந்தால் என்ன கதி ஏற்படுமென்று கூறி, அப்படி ஏற்படாமல் இருக்க இப்பொழுதே எல்லாரும் உயிரைக் கொடுக்கவும் தயாராக வேண்டுமென்று வற்புறுத்துகிறார். கோயரிங் பேச்சோ, படுமோசமாயிருக்கிறது. "எங்களுக்கு வெற்றிகள் கிடைத்து வந்தன. கடைசியில் விதி வந்து குறுக்கிட்டு விட்டது" என்று பச்சையாக ஒப்புக் கொள்கிறார்! இந்த இரண்டு பேச்சுகளும் ஆரம்பமாகும் முன் ஆர். ஏ. எப். விமானங்கள் பெர்லின் நகரில் பட்டப்பகலில் தோன்றி குண்டுகளைப் பொழிந்து விட்டுப் போயின. தங்கள் தலைவர்கள் ஜெர்மனிக்கு ஏற்படுத்தியிருக்கும் படுமோசமான நிலைமையை ஜெர்மன் ஜனங்கள் அறிய இதைவிட வேறு அத்தாட்சி வேண்டாமென்று நேச வட்டாரங்கள் குதூகலப்படுகின்றன. ருஷ்யாவில் ஜெர்மனி அடைந்து வரும் தோல்விகள் ஏற்கெனவே ஜெர்மானியரிடம் சலசலப்பை ஏற்படுத்தி வருகின்றன.

எண்ணெய் மேல் ஆசை வைத்து ஹிட்லர் காகஸஸ் பிரதேசத்துக்குள் அனுப்பிய அவ்வளவு துருப்புகளும் தப்பித்துக் கொண்டு வெளியேறுவது இனி சாத்தியமாகாதென்று தோன்றுகிறது. அவைகளை மடக்கிக் கொண்டு வதம் செய்ய ருஷ்யர்கள் உறுதியாயிருக்கிறார்கள். தென் பகுதியில் முன்னேறி மெய்காப்பை மீட்டுக் கொண்டு வந்த சைன்யங்களும், டுவாப்ஸிலிருந்து வருபவைகளும், ஆர்மவீஸ்ரக்கைப் பற்றி முன்னேறி வந்தவைகளும், டிகோரெட்ஸ்–கிரபோட்கின் பிரதேசங்களைப் பிடித்து வந்தவைகளும் எல்லாமாக, க்யூபன் மாகாணத்தின் தலைநகரான கிராஸ்னடாரைச் சுற்றிச் சுமார் ஐம்பது மைலுக்குள்ளாக ஒரு வளையமாக நெருங்கி வருகின்றன. எப்படியாவது நழுவிக் கொண்டு நாஸிகள் தப்பித்துக் கொள்ளாமல், நோவோரிஸிஸ்க் துறைமுகத்தை இலக்காகக் கொண்டு ஒரு பெரும் ருஷ்ய சைன்யம் முன்னேறுகிறது. ராஸ்டாவ்–கிராஸ்னடார் இருப்



சர்ச்சில்

புப் பாதையைத் துண்டிக்க ஒரு சைன்யம் விரைகிறது. க்யூபன் பிரதேசம் நாலா திசையிலும் வளைத்துக் கொள்ளப் படுவதால், சுமார் 24 ஜெர்மன் டிவிஷன்களின் (இரண்டு லக்ஷம் துருப்புகள்) கதி அதோ கதியாகலாம் என்று எதிர் பார்க்கிருர்கள். கடுமையான பனியும், ருஷ்ய கருங்கடற் படையின் பீரங்கிகளும் குறைவின்றி செஞ்சேனையுடன் ஒத்துழைக்கின்றன. கெர்ச் ஜலசந்திப் பக்கம் ஓடலாம் என்ற நம்பிக்கை ஹிட்லருக்கு இருக்குமாகில், அதை அவர் சீக்கிரம் கைவிட்டு விட வேண்டியிருக்கும். கிராஸ்னடாரைச் சுற்றியிருக்கும் வளையம் இறுகிக் கொண்டே வருகிறது. அஸாவ் கடலை நோக்கி ஜெர்மானியர் மெள்ள மெள்ள ஒதுக்கப்பட்டு வருகின்றனர்.

'காகஸஸுக்கு வாசற்படி' என்ற பட்டப்பெயர்பெற்ற ராஸ்டாவ் நகரத்தைச் சுற்றியும் ருஷ்யர்கள் சூழ்ந்து நெருங்குகிருர்கள். ஸால்ஸ்கைக் கைப்பற்றிய செஞ்சேனை, ஜெர்னேவாய் என்ற முக்கிய ரயில்வே ஸ்டேஷனைப் பிடித்ததில் ராஸ்டாவுக்கு முப்பது மைல் அருகாமையில் நெருங்கி விட்டது, க்யூபன் பிரதேசத்துடன் இருந்த சம்பந்தத்தை அறுத்திருக்கிறது. ஜெர்மனி பலத்த பாதுகாப்புகள் செய்திருந்த மெசிடின்ஸ்கயா (ராஸ்டாவுக்கு 65 மைல் தென் கிழக்கில் இருப்பது) ருஷ்யர்கள் வசமாகி விட்டது. ஸவடோவா என்ற ரயில்வே ஸ்டேஷனை அவை கைப் பற்றியதால் ராஸ்டாவுக்கு வட மேற்கிலுள்ள பிரதேசங்களுடன் சம்பந்தம் அறுபட்டு விட்டது. ஸோவியத் பீரங்கிகளின் முழக்கம் ராஸ்டாவில் கேட்கத் தொடங்கிவிட்டது.

அதே சமயத்தில், ஸ்டாலின் கிராடிலிருந்து பெரிய செய்தி ஒன்று ஜெர்மானியருக்கு மிகுதியிருக்கும் கிஞ்சித்து மன உறுதியையும் குலைக்கிறது. ஸ்டாலின் கிராடைப் பிடிக்க வந்த பிரசித்தி பெற்ற ஜெர்மன் ஆருவது சைன்யம்—முன்பு பெல்ஜியத்தை ஆக்ரமித்து கலங்க மலங்க அடித்த அந்த வீர சைன்யம் — இன்று இருந்த இடம் புல் முளைத்துப் போய் விட்டது! மூன்றே கால் லக்ஷம் நாஸி துருப்புகளையும் அழித்த செஞ்சேனை, ஸ்டாலின் கிராடுக்கே விடுதலை உண்டாக்கி விட்டது. இந்த ஜெர்மன் ஆருவது சைன்யத்துக்குத் தலைமை வகித்த ஜெனரல் பாலஸ் என்பவரும் மற்றும் பதினைந்து ஜெனரல்களும் கைதியானுர்கள்.



ரூஸ்வெல்ட்

வோரோனெஷ் அரங்கத்திலும் மேல் திசையிலும் தெற்கிலும் ருஷ்ய முன்னேற்றம் வேகமாக இருக்கிறது. அதனுல் கார்க்கோவ், குர்ஸ்க் இரண்டுக்கும் ஏககாலத்தில் விடுதலை நெருங்கி வருகிறது. இங்கே முக்கிய வெற்றியாக, காஸ்டோர்னயா ஜங்ஷன் வசமாகியிருப்பதைக் குறிப்பிட வேண்டும். ருஷ்ய ஆகாயப் படையும் மும்மரமாக வேலை செய்கிறது. குர்ஸ்க் - ஓரல் இருப்புப் பாதையில் பிளவு ஏற்பட்டு விட்டது. கூபியான்ஸ்க் ருஷ்யருக்குத் திரும்பியிருக்கிறது.

வெலிகி லூகி, லெனின்கிராட் பிரதேசங்களிலும் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் ஸோவியத் துருப்புகள் தாக்கிக்கொண்டு வருகின்றன.

இப்படியாக, கைமாறின இடங்கள் ருஷ்யர்களுக்கு துரிதமாகத் திரும்புகின்றன. ஜெர்மனி சரியானபடி உதை வாங்கும் இந்தத் தருணம் தான் பிரிட்டிஷ் - அமெரிக்கத் தாக்குதலுக்கு ஏற்றது என்று ருஷ்யர்கள் வற்புறுத்துகிருர்கள்.

**பெரியார்கள் விஜயம்**

திடீரென்று கஸபிளாங்காவின் பெயர் அமர்க்களப்பட்டது. ரூஸ்வெல்ட் துரையும் சர்ச்சில் துரையும் கலந்து, யுத்தத்தைத் தீவிரமாகவும், வெற்றிகரமாகவும் நடத்துவதற்குத் தீர்மானம் செய்ய அந்த இடத்தை இருேனு அவர்கள் தேர்ந்தெடுத்ததுதான் காரணம். கஸபிளாங்கா சந்திப்பினுலும், செய்த முடிவினுலும் பெரிய பலன்களை எதிர் பார்க்கலாம்.





இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு சர்ச்சில் துருக்கிக்கும் விஜயம் செய்தார். பிரெஸிடெண்ட் இனேனுவுடன் சம்பாஷணை நடத்தி விட்டு, வழியில் ஸைப்ரஸ் தீவில் இறங்கி, "கூடிய சீக்கிரம் கிரீஸ் தேசத்திற்கு விடுதலை வருகிறது" என்ருர். கெய்ரோவையும் பார்த்துக் கொண்டு பிரிட்டனுக்குத் திரும்பினுர்.

**டுனிஷியாவில் கடும் போர்**

மீண்டும் டுனிஷியாவில் போர் மூண்டிருக்கிறது. பாண்ட் - டு-பாஸ் பிரதேசத்தில், ஜெர்மானியர் மேலும் முன்னேறவே, பிரெஞ்சு துருப்புகள் திரும்பத் தாக்கி அவைகளை நிறுத்தின. அமெரிக்கப் படைகளும் சமீபத்தில் மத்திய அரங்கத்தில் கைவிட்ட பிரதேசங்களை மீட்டுக் கொண்டு விட்டன. இங்கே அமெரிக்க விமானங்களும் ஜெர்மன் விமான

மூத்தண்ணாவும் மாடனும்



தளங்களையும், துறைமுகங்களையும் அடுத்தடுத்துத் தாக்கி வருகின்றன.

தவிர, அமெரிக்கத் துருப்புகள் காப்ஸா — ஸ்பாக்ஸ் சாலையில் ஒரு முக்கிய இடமாகிய மாகென்ஸியை நெருங்கி விட்டன. இதை அவைகள் கைப்பற்றினால் ரோமெல் படைகள் வரும் வழி தடைப்பட்டுப் போகும்.

ரோமலின் படைகள் டூனிஷியாவில் இருக்கும் அச்சுப் படைகளுடன் கலந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்வது ஒரு முக்கியமான வேலை. டூனிஷியாவில் **மாரெத்** அரண் என்பது, பிரான்ஸில் மாஜினட் அரண் போன்றது. இதில் நின்று கொண்டு ரோமெல் எட்டாவது ஸைன்யத்தைத் தடுக்க முயற்சிக்கலாம் ஆகையால், பிரிட்டிஷ் எட்டாவது சேனை துரிதமாக இந்த மாரெத் அரணை நோக்கி முன்னேறியிருக்கிறது.



" போடா போ! பிச்சை போடறந்துக்கு இங்கே ஒண்ணும் கொட்டி வச்சிருக்கல்லே!"

" ஏதோ உங்க கையாலான உபகாரம் செய்யுங்க ஏழைக்கு."

ஜெனரல் ஜிராடின் படைகள் தென் கிழக்கு டூனிஷியாவில் இரு முக்கியமான இடங்களைக் கைப்பற்றியுள்ளன.

லிபியா முழுவதும் கை மாறி விட்டதைக் கேட்ட முஸோலினி "இதாலியர் கையில் ஆயுதம் ஏந்த பலம் உள்ளவரை அவர்கள் சண்டை போடுவார்கள்" என்று வீறுப்புடன் கூறினார்.

### தென் மேற்கு பஸிபிக்

ஜப்பானிய நடவடிக்கைகள் மீது நேசக் கட்சியார் சரியான கண்காணிப்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்திரேலியா மீது அது பாயுமோ என்னும் சம்சயம் அதிகமாகியிருக்கிறது. ஏனெனில் ஜப்பான் அதன் கடற்படையை டைமர், ஆராஸ், கெய்ஸ், டெனிம் ராஸ், மொலுக்காஸ் தீவுகளிலும், லேய்—ஸலாமுவா பிரதேசங்களிலும் சேமிக்கிறதுதான் இந்த சம்சயத்திற்குக் காரணம். ஜப்பானியக் கப்பல்களைப் பல அமெரிக்க வெடி விமானங்கள் தாக்கிக் கடலில் மூழ்கடித்து வருகின்றன. ஸாலமன் தீவுக்கு அருகாமையில் ஒரு கடற்போரே நடக்கிறதாம்.

நியூ கினியில் ஜப்பானுடைய வால் ஆடுவது நின்று விட்டதென்று சொல்லலாம். பாபுவாவில் ஜப்பானியத் துருப்புகளுக்குத் தலைமை வகித்த ஜெனரல் நீரில் மூழ்கி உயிர் துறந்தார்.

குவாடல்கனாரில் இதே மாதிரி அமெரிக்கர்கள் முன்னேற்றம் செய்து வந்தால், முப்பதே தினங்களில் அந்தத் தீவு பூராவும் விடுதலை பெறுமாம்.

### இதர செய்திகள்

பின்லாந்து தனிப்பட சமாதானம் செய்து கொள்ளலாம் என்று ஒரு வதந்தி இருக்கிறது.

அமெரிக்க விமானங்கள் ரங்கூனையும், ஆர். ஏ. எப். விமானங்கள் ரதிடாங்கையும் தாக்கின.

## விகடன் புகைப்படச் சித்திரம்

போட்டோ மாலி




யாரய்யா கூப்பிட்டிங்க?

7th FEB.
1943

தற்போதய நிலைமை மாறினவுடன் சரக்குகள்
மறுபடி அனுப்பப்படும்




இவைகளுக்கு எவ்வளவு

குதூகல வரவேற்பு

கிடைக்கும் தெரியுமா!

HUNTLEY & PALMERS
BISCUITS

READING · ENGLAND ESTABLISHED



# திண்ணைப் பேச்சு

"ரமணி"

( சாமா — சாஸ்திரி )

*சாஸ்திரி* :— அப்போ...ஜன்ம ஜன்மத்துக்கும் இந்த இங்கிலீஷ் படிப்பைக் கட்டிண்டு தான் அழணுமாக்கம்?

*சாமா* :— சே, சே!......அப்படி ஒண்ணும் சொல்லல்லே...

*சாஸ்திரி* :— பின்னே என்ன தான் சொல்ருர், **ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்** ?

*சாமா* :— 'சின்ன வகுப்புகளிலே இப்போ சொல்லிக்கொடுக்கிற மாதிரி......பெரிய வகுப்புகளிலேயும்......தமிழ் பாஷையிலேயே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியது அவசியந்தான். இருந்தாலும் அந்த மாதிரி மாறுதல் திடீர்னு வந்துடப்படாது! கொஞ்சம் கொஞ்சமாத்தான் வரணும்...அவசரப்பட்டா காரியம் கெட்டுப் போயிடும். முன்னேற்றத்துக்கே தடங்கல் ஏற்பட்டுடும். அதுனுலே,...நாம் கொஞ்சம் பொறுத்திண்டிருக்கணும்' அப்படீன்னு சொல்ருர்.


*சாஸ்திரி* :— எத்தனை வருஷம் பொறுத்திண்டிருக்கணுமாம்?

*சாமா* :— அறுபது, எழுபது வருஷம் பொறுத்திண்டிருந்தாப் போறுமாம்!

*சாஸ்திரி* :— நல்ல வேளை! நூறு இருநூறு வருஷம் காத்திண்டிருக்கணுமோன்னு பயந்து போயிட்டேன்!

*சாமா* :— ஓய்! உமக்கென்ன அதைப் பத்தி அக்கரை? உம்ம பையன் தான் இப்போ காலேஜ்லே படிக்கிருனே! நாளைக்கே இது மாதிரி மாறுதல் வந்துட்டாலும் ...... அதுனுலே அவனுக்கு என்ன பிரயோசனம்? கத்துண்ட இங்கிலீஷைக் யெல்லாம் மறந்துடப் போருனு?

*சாஸ்திரி* :— ஆ...மா! பிரமாத இங்கிலீஷைக் கத்துண்டுட்டானுக்கும்! ஏங்கணும் அந்த வயத்தெரிச்சலைக் கிளப்பறீர்! இந்த வருஷம்...அவன் பாஸ் பண்றது



ஸ்ரீமதி லலிதாங்கி




......படிக்கிறபோது ஆத்துக்காரி இருந்தா......

ரொம்ப சந்தேகம்னு அவன் வாத்தியார் சொல்லிட்டார். தமிழிலே எல்லாம் கெட்டிக்காரனா இருக்கானாம். ஆனா, இங்கிலீஷிலே வந்து...பெரிய பூஜ்யமாம்! என்னத்தைச் செய்யறது நான்? அதான் இங்கிலீஷைக் கண்டா எனக்கு ஆத்திரமா வரது. பணத்தைக் கொட்டிப் படிக்க வச்சு, கடைசியிலே '**பீளாங்கி**'ன்னு ஆனா...என்ன பண்றது?

*சாமா* :— அப்படியொண்ணும் ஆகாது. கவலைப் படாதேயும். 'ஹாஸ்டல்'லே இருக்கிற பாக்கி பசங்கள் படிக்கிறபோது...கூட இருந்தாலே போறும். தன்னாலே பரீக்ஷை பாஸாயிடும்.

*சாஸ்திரி* :— இப்போ அவன் ஹாஸ்டல்லே இல்லியே! குடுத்தனம்னா வச்சிருக்கு! அவன் ஆத்துக்காரியே தான் இருக்கா அங்கே. ஹோட்டல்லே சாப்பிடறது உடம்புக்கு ஆகல்லேன்னு மாமனாருக்கு எழுதினானாம்; உடனே... இரண்டாம் பேருக்குத் தெரியாமே தம் பொண்ணை அழைச்சுக் கொண்டு போய் விட்டுட்டார் சம்பந்தி: சின்னதா ஒரு வீட்டைப் பார்த்துக் குடித்தனம் வச்சிருக்கார்.

*சாமா* :—அப்போ பையன் உருப்பட்டாப்போலத்தான்! படிக்கிறபோது பக்கத்திலே ஆத்துக்காரி இருந்தா ...சட்டுனு படிப்பு வந்துடும்.

*சாஸ்திரி* :— அதான் சொன்னேனே......அவன் இந்தத் தடவை பாஸ் பண்றது சந்தேகந்தான்!

*சாமா* :— சந்தேகமே வேண்டாம்! கொஞ்ச நஞ்சம் சந்தேகமிருந்தா...**பிரபாத் டாக்கீஸிலே பத்தாவது மணி**ன்னு ஒரு **ஹிந்திப்** படம் ஓடறது......அதைப் போய்ப் பார்த்தா...சந்தேகமெல்லாம் தீர்ந்து போயிடும்.

*சாஸ்திரி* :— அதென்ன படம்?

*சாமா* :— காலேஜ்லே படிக்கிற பையனுக்குக் காதல் உண்டாகிறது. அதுனாலே அவனுடைய படிப்பெல்லாம் குட்டிச்சுவராப் போய், கடைசியிலே பரீக்ஷையிலே 'ஸைபர்' வாங்கறான். படம் நன்னா இருக்கு. **பானர்ஜி**யும் **ஊர்மிளா**வுந்தான் காதலர்களா ஆக்ட் பண்றா.

*சாஸ்திரி* :— சரிதான், உலகத்திலே நடக்கிறதை......படத்திலே காண்பிச்சிருக்கா!

*சாமா* :— ஆமாம். அந்தப் படத்தோடே இன்னொரு குட்டிப் படம் கூடக் காண்பிக்கிறா. "மனைவிகளுக்காகப் பள்ளிக்கூடம்" (School for wives)னு பேரு. இந்த யுத்த காலத்திலே குடித்தனத்தை எப்படி சிக்கனமா நடத்தணும்ங்கிறதைப் பத்தி சில புத்திமதிகளைச் சொல்லிக் கொடுத்திருக்கா!

*சாஸ்திரி* :— என்ன புத்திமதிகளோ?



*சாமா* :— முக்கியமா சமையல் சிக்கனத்தைப் பத்தித்தான்! "அடுப்பு வீணா எரிஞ்சிண்டிருக்கிறபோது சமையலைக் கவனிக்காமே......யாரோடேயாவது வம்பளந்திண்டிருக்கப் படாது, 'குக்கர்' பாத்திரத்திலே சமையல் பண்ணினா ரொம்ப லாபம் இருக்கு..." அப்படீன்னு சிற்சில புத்திமதிகள்.

*சாஸ்திரி* : — சரிதான்! இப்போ...சாப்பாட்டு சிக்கனத்தைப் பத்தி உபதேசம் பண்ணாதவாளே இடையாது போலே இருக்கு! மெட்ருஸ் கவர்னர்கூட ஏதோ உத்தரவு போட்டிருக்காராமே?

*சாமா* :— உத்தரவு ஒண்ணும் போடல்லே. "அதிகப்படியான ஜனங்களுக்கு விருந்து இருந்து வச்சு சக்கரையை வீண் பண்ணாதேயுங்கோ"ன்னு ரொம்ப மரியாதையா சொல்லியிருக்கார். பம்பாய் கவர்னர்தான் "50 பேருக்கு மேலே யாருக்கும் விருந்து செய்யப்படாது"ன்னு உத்தரவே போட்டிருக்கார்!

*சாஸ்திரி* :— சரி...அது போகட்டும்......தியாகய்யர்வாள் உத்ஸவமெல்லாம் ஒழுங்கா நடந்து தோல்லியோ?

*சாமா* :— பேஷா நடந்துது!

*சாஸ்திரி* :— 'அந்தப் பாட்டு' 'இந்தப் பாட்டு'ன்னு சண்டையின்டை உண்டாகல்லியே?

*சாமா* :— சண்டையும் இல்லே, பூசலும் இல்லே! சண்டை வரத்துக்கு இடமில்லாமேயே.....மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் செய்துட்டார்.

*சாஸ்திரி* :— என்ன செய்துட்டார்?

*சாமா* :— தமிழ்ப் பாட்டையும் ஒண்ணு பாடி வச்சார்.

*சாஸ்திரி* :— ஏங்கனும், தியாகய்யர்வாள் சந்நிதியிலே... அதுவும் அவாளுடைய சிராத்த தினத்திலே...தியாகையர்வாள் கீர்த்தனைகளைப் பாடறதுதானே சம்பிரதாயம்? சங்கீத சபா மாதிரி எதை வேணும்னாலும் பாடலாமா என்ன?


*சாமா* :— சாஸ்திரிகளே, நீர் சொல்றது என்னவோ வாஸ்தவந்தான்! தீக்ஷிதர் தினத்தைக் கொண்டாடறபோது தீக்ஷிதர் கீர்த்தனைகளைத்தான் பாடற வழக்கம். போன வியாழக் கிழமையன்னிக்குப் **புரந்தர தாஸர்** தினம். அதுக்காக 'ஸ்பெஷல்' ப்ரோகிராம் கூட ரேடியோவிலே நடந்துது. புரந்தர தாஸர் கீர்த்தனைகளைப் பார்த்து **லலிதாங்கி**யும் **வசந்தகுமாரி**யும் பாடினா...அது மாதிரி செய்யறது தான் சம்பிரதாயம்! இருந்தாலும், சம்பிரதாயத்தை யெல்லாம் ரொம்ப தூரம் கவனிக்க முடிகிறதா இந்தக் காலத்திலே? இன்னம் கொஞ்ச நாள் போனா சினிமாப் பாட்டைக் கூடப் பாடும்படியா நேரிட்டாலும் நேரிடலாம். நமக்கேதுக்கு அந்த வம்பு? பேசாமே போய்ட்டு வாரும், காலம் கெட்டுக் கிடக்கிறது!




...வம்பளந்திண்டிருக்கப் படாது...

# சம்பளம் உயர்த்தபட்டது

ஐம்பது ரூபாய் அதிகமாக!




தினசரி டோஸ்தான் இதற்குக் காரணம்.

முகர்ஜி வெகுமதி பெறுகிறார்! இவர் இவ் வருஷம் முழுதும் மிகுந்த ஊக்கத்துடன் செய்திருக்கும் சிறந்த வேலைக்காக உத்தியோக உயர்வும், சம்பள உயர்வும் இவருக்கு ஏற்பட்டிருக்கிறது! தனது வெற்றிக்குக் காரணம் வேறொன்று கூட உண்டு என்று முகர்ஜிக்குத் தெரியும். சென்ற 10 மாதங்களாக முகர்ஜி தினமும் காலையில் ஒரு டோஸ் க்ருஷன் சால்ட்ஸ் தவறாமல் சாப்பிட்டு வருகிறார். ஆபீஸில் மற்றவர்கள் ஜுரம், ஜலதோஷம் இவைகளால் பாதிக்கப்பட்டு ஆபீஸுக்கு வராமலிருந்த போது முகர்ஜிக்கு மட்டும் தவறாமல் வந்தார். தவிர சிறந்த ஆரோக்கியத்துடனும் இருந்தார். அந்த மோசமான மழை நாட்களில் முகர்ஜிக்கு உடம்பு வலி, முடக்கு வாதம் இவைகளின் தொல்லை ஏற்படவில்லை. அவர் சிடுசிடுப்பாகவோ, சுறுசுறுப்பின்றியோ இருக்கவில்லை. கம்பெனி மானேஜர்கள் இதைக் கவனித்து அவரது சிறந்த உழைப்பை மெச்சிப் பரிசளித்தார்கள். சிறந்த ஆரோக்கியத்துடன் விளங்கும் ரகசியம் முகர்ஜிக்குத் தெரியும்! தினசரி காலை ஒரு கப் டீ அல்லது அரை கிளாஸ் வெந்நீருடன் ஒரு டோஸ் க்ருஷன் சாப்பிடுவதினால் பிரதி பலன் ரூபாய் கணக்கில் எவ்வளவு கிடைக்குமென்பது முகர்ஜிக்குத் தெரியும். நீங்களும் ஏன் முகர்ஜியைப் பின்பற்றக்கூடாது?



# க்ருஷன் சால்ட்ஸ்

# Kruschen Salts

No. 14-42


# வேம்புவின் பிரசங்கம்

பி.வி. ராமச்சந்திரன்

ரிடயர்ட் ஹெட் மாஸ்டர் வேம்பு அய்யர் (பள்ளிக் கூடப் பெயர் "காக்காய் மூக்கன்") அவர்களின் பூர்வோத்திரங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் உங்களுக்கு அவ்வளவு ஆவல் இருக்காது. ஆனாலும் அவர் நமது கதைக்கு முக்கிய பாத்திரமானதால் அவரைப் பற்றி இரண்டு மூன்று வாக்கியங்கள் முன்னுரை சொல்லி விட்டு நேராகக் கதையை ஆரம்பித்து விடுகிறேன். வேம்பு அய்யர் மார்க் போடுவதில் எவ்வளவு கஞ்சனோ அவ்வளவு கஞ்சன் பணம் செலவு செய்வதிலும். அதனால் அவர் இப்போது கொள்ளைப் பணக்காரர். நீங்களும் நானும் டிரங்குப் பெட்டிக் கடியில் பழைய காகிதமல்லவா போடுவோம்? அவர் நூறு ரூபாய் நோட்டுகளே போட்டு வைப்பதாகக் கேள்வி! அவரது ஐம்பதாம்வயதில் அவரது மனைவி, கோபுவை வைத்துவிட்டு இறந்து போனாள். அதனால் அவர் தங்கத்தை இரண்டாவதாகக் கல்யாணம் செய்து கொள்ள, அவள் தம்பி சீனுவும் வேம்பு அய்யர் வீட்டில் வசிக்கலானான். கோபுவும் சீனுவும் சுமார் ஒரே வயது. இருவரும் காலேஜில் ஒரே கிளாஸில் படிக்கிறார்கள். பண முடையால் இருவருக்கு மிடையில் எங்கு மில்லாத அன்னியோன்னியம் ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் ஒரே ஒரு விஷயம். வேம்பு அய்யர் இந்திய சரித்திரத்தில் புலி என்று பெயர் — அதுவும் மொகலாய அரசாட்சியில். அதில் ஆராய்ச்சி கூடச் செய்திருக்கிறார்.

ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணிக்கு வேம்பு அய்யர் வீட்டு ஜன்னலில் எட்டிப் பார்த்தால் சோப்பு நுரைக்குள் ஒரு முகம் மறைந்திருப்பது தெரிந்திருக்கும். கூர்ந்து கவனித்தால் அந்த முகத்தில் வெளியில் தெரியும் ஒரு சிறிதளவு பாகத்திலிருந்தே அது அதி வியாகூலத்திலிருக்கிறது என்று தெரியும். இன்னும் கூர்ந்து கவனித்தால் அந்த வியாகூலம் வெறும் "பிளேடு"களின் விலையைப் பற்றியல்ல, இன்னும் ஏதோ பெரிய விஷயத்தைப் பற்றி என்பது தெரியும்.

இவன்தான் கோபு. வேம்பு அய்யரின் புதல்வன். கலாசாலை சரித்திர மாணவர் சங்கத்தின் காரியதரிசி. இப்போது சங்கம் ஹம்பி முதலான இடங்களுக்குப் பிரயாணம் செய்யப் போகிறது. ஆனால் தானும் கூடப் போகக் கையில் பணம் இல்லை. அதுதான் கவலை.

"மாமா, டேய், டேய், மாமா, எழுந்திருடா, மணி பத்து" என்று சோப்பு நுரைக் குள்ளிருந்து சப்தம் கேட்டது. ஓரத்தில் நாம் வெறும் படுக்கை யென்று நினைத்தது சிறிது அசைகிறது. ஒரு முகம், சொப்பன உலகத்தின் ஆனந்தத்திலிருந்து, விழிப்பு உலகத்தின் துயரில் பங்கெடுத்துக் கொள்கிறது. — இதுதான் வேம்புவின் மைத்துனன் — சீனு.

"மாமா, டேய், நேற்று போனாயே, என்னடா ஆச்சு?" என்றான் கோபு.

"க்ஷவரம்" என்று சுருக்கமாக விளக்கிச் சொன்னான்.

"பின் என்னடா பண்ணுவது? நாமே ஹம்பிப் பிரயாணம் ஏற்பாடு பண்ணி...நாமே போகா விட்டால் எப்படி?"

"எப்படி என்றால் அப்படித்தான் — நானும் குட்டிக் கரணம் போட்டுப் பார்த்தாயிற்று — அத்திம்பேரைத்தான் கக்க வைக்கணும்."

"முடியாது, மாமா, முடியாது— இதற்கு முன்னாலேயே சித்தியை முடுக்கி வலை போட்டுப் பார்த்தோம். அவள் மசியறதாக இல்லை."

"சித்தி வழியாக ஏன் பண்ணினாய்? அவள் எப்பவும் ஒரு வீணை வாங்கணும், வீணை வாத்தியாரை வைக்கணும் என்று தொந்தரவு பண்ணுகிறாள். அதற்கு அவர் இன்னும் இணங்கவில்லை. அவளால் முடியவே முடியாது. நாமே வேலை செய்யணும்."

"உன் பாச்சா பலிக்காதுடா மாமா, பலிக்காது. நம்ப துரதிருஷ்டத்தைப் பாருடா. குரங்கு கையில் பூமாலை கிடைத்த மாதிரி பணம் அவரிடம் மாட்டிக்கொண்டு தவிக்கிறது."

"குரங்கு கையிலிருந்து பிடுங்குகிற வழி ரொம்ப சுலபம்."

"எப்படி?"

"வாழைப்பழத்தை எறிய வேண்டும்."

"அப்பாவுக்கு வாழைப் பழம் பிடிக்காதே!"

"அட மடையா, வாழைப் பழம் என்றால் வாழைப்பழம் அல்ல. ஏதோ ரொம்பப் பிடிக்கும் வஸ்து."

"தெரிகிறது, பாதாம் அல்வாவைச் சொல்கிறாய் — அது ஒரு சேர் அல்வாவைத் தின்று விட்டு நம்மையே திருப்பிக் கொள்ளும்."

"கோபு, நான் சொல்வதைக் கேள் — நேற்று ராத்திரி யெல்லாம் யோசித்து வைத்திருக்கிறேன். என்ன பண்ணணும் தெரியுமா? வெள்ளிக்கிழமை டீ பார்ட்டி வைத்து, அத்திம்பேரை அன்று மொகல் ஆட்சியைப் பற்றிப் பேசச் சொல்லணும். பாதம் அல்வா, ரோஜா மாலை, அதோடு நம் புரொபஸர் என்று தூக்கி விடுதல், தன் ஆராய்ச்சியை யெல்லாம் வெளிவிட சந்தர்ப்பம் இவ்வளவும் கிடைத்தால் அத்திம்பேர் கக்கி விடுவார்—"

"ஆமாம், மாமா, உன் மூளையே மூளை! — பணத்தை வாங்கிக் கொண்டு அன்று ராத்திரி எல்லோரோடும் பிய்த்துக் கொள்ளலாம்."


சோப்பு நுரைக்குள்ளிருந்து வெளி வந்த முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடிற்று.

**வே**ம்பு அய்யர் சாதாரணமாக, 'வெய்யிற் காலத்தில் எங்கள் அம்பட்டனிடம் க்ஷவரம் செய்து கொண்ட மாதிரி' எப்பவும் எரிச்சலாக இருப்பார். ஆனால் இரண்டு மூன்று நாளாக அவர் உலகத்தின் சர்வ சராசரத்தின் மீதும் பிரசன்னமாக விளங்கினார். பால்காரனிடம் குடும்ப சமாச்சாரம் விசாரித்தார். மனைவியிடம் சல்லாபித்தார். வீட்டுப் பூனை மீது கூட வழக்கம் போல் புஸ்தகத்தை எறியவில்லை. ஆனால் அநேக புஸ்தகங்களைப் படித்து குறிப்புகள் எழுதுவது தெரிந்தது.

இடையில் ஒரு நாள் கோபு சீனுவைப் பார்த்து "டேய் மாமா, அப்பா குஷியில் இருக்கிறார், இப்பவே அடி போடலாமா?" என்றான்.

"அப்படி ஒன்றும் பண்ணாதே! — தானாகப் பழுக்கட்டும்" என்றான் சீனு.

வெள்ளிக் கிழமை மாலை சுமார் நாலு மணிக்குக் கலாசாலை வராந்தாவில் சுமார் நூறு மாணவர் மாணவிகள், புரொபஸர்கள் சிற்றுண்டி அருந்துகிறார்கள். வேம்பு அய்யர் எம். ஏ., எல். டி., பாதாம் அல்வாவைத் தின்பதிலும், தன் பக்கத்தி லிருந்த தலைமை ஆசிரியரிடம் பேசுவதிலும் ஈடுபட்டிருக்கிறார். எங்கும் சிரிப்பு, கொம்மாளம். ப்ளேட்டுகளின் இனிய நாதம். கோபு ...ாரியதரிசி ஹோதாவில், வாயில் ஈ புகுந்ததா, அல்வா புகுந்ததா என்று தெரியாமல் ஓடிக் கொண்டிருக்கிறான். இடையில் எவனோ ஒருவன், "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்று தன் பக்கத்திலிருப்பவனிடம் சொல்லிச் சிரித்தான்.



வேம்பு அய்யரின் நினைவு சுமார் அரைக் கால் க்ஷணம் அந்தப் பக்கம் சென்றது. பிறகு பழைய படி தன் சிற்றுண்டியில் ஊக்கமாக ஈடுபட்டார். ஆனால் மறுபடியும் மற்றொருவன் "காக்காய் உட்கார்ந்ததும் பனம் பழம் விழுந்ததும்" என்று சொல்லிப் பேசும்போது அவரது பேச்சும் சிற்றுண்டியும் தடைபட்டன. இந்தக் காக்கையைப் பற்றின பழமொழிகளுக்கு ...வகே பிரமேயமே இல்லையே என்று அவரால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. இடையில் சீனுவை எவனோ, "ஏண்டா எத்தனை நாளாக சிகரெட்டை விட்டு விட்டாய்?" என்று கேட்டான்.

"பசங்கள் அப்படித்தான் இருப்பார்கள்" என்று நினைத்து விட்டு விட்டார். இச்சிறு நிகழ்ச்சிகளைத் தவிர்த்து தேக் கச்சேரி வெகு விமரிசையாக முடிந்தது. எல்லோரும் வேம்பு அய்யரின் பிரசங்கத்தைக் கேட்க, பெரிய ஹாலுக்குள் நுழைந்தனர்.

**அ**ப்போது மணி ஐந்து. முதலில் பலத்த கரகோஷத்திற்கிடையில் வேம்பு அய்யருக்கு

ரோஜாப் பூமாலை போடப்பட்டது. வேம்பு அய்யர் எழுந்து "அக்ராசன ரவர்களே! சகோதரி சகோதரர்களே! இன்று நான் மொகலாய அரசாட்சியில்......"

சாதாரணமாக வெகு காலம் உபாத்தியாயராக வேலை செய்தவர்களுக்குக் கையில் 'சாக்' இல்லாமல் பேசுவது கஷ்டம். அதோடு அடிக்கடி (முக்கியமோ இல்லையோ) சில வார்த்தைகளை போர்டில் எழுத வேண்டும். அதே மாதிரி வேம்பு அய்யர் மேஜையிலிருந்த 'சாக்' கட்டியை எடுத்து "மொகல் ஆட்சி" என்று போர்டில் எழுத அந்தப்புறம் திரும்பினார்.—அடுத்த வினாடி அப்படியே ஸ்தம்பித்து விட்டார்! அதே வினாடி மாணவர்களிடையிலிருந்து பலத்த சப்தம் ஏற்பட்டது. போர்டில் ஒரு மனிதன் தலை வரையப்பட்டிருந்தது. அதற்கு வெகு நீளமுள்ள ஒரு மூக்கு. இதன் அர்த்தம் யாருக்காவது புரியாமலிருக்கப் போகிறதோ என்று அடியில் கொட்டை எழுத்தில் "காக்காய் மூக்கன்" என்று எழுதப்பட்டிருந்தது.

அடுத்த நிமிஷம் சேவகன் போர்டை சுத்தம் செய்து விட்டுச் செல்ல வேம்பு அய்ய "மொகல் பீரியட்" என்று போ.டில் எழுதி விட்டுத் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

அது ஓர் உயர்தரப் பிரசங்கம் என்பதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. சிறிது நேரம் அந்தச் சபை அவரது பிரசங்க மழையில் ஈடுபட்டிருந்தது. பாபரைத் தொட்டு விட்டு அக்பரைப் பற்றி விரிவாகப் பிரசங்கம் செய்தார். அக்பர் நிஜமாகவே காதில் ஓட்டை விட்டு வளையம் அணிந்தார் என்பதைத் தக்க ஆதாரங்களுடன் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நிரூபித்தார். சுமார் 5–45 மணிக்கு அக்பர் முடிந்து, 6 மணிக்கு ஜிஹாங்கிரைப் பற்றியும், அதன் பின்னர் நூர்ஜஹானைப் பற்றியும் சொன்னார்.

நூர்ஜஹானைப் பற்றிப் பேசும்போது கரகோஷங்களும் இடையிடையில் பூனைகள் காக்கைகள் போல் சப்தங்களும் உண்டாயின. ஒரு மாணவி வீடு செல்ல எழுந்திருக்க மற்ற மாணவிகள் அவளைப் பலவந்தமாக உட்கார வைத்தபோது மாணவர்களிடையே பலத்த கலவரம் ஏற்பட்டது.

அன்று மீட்டிங் முடிந்து எல்லோரும் வீட்டிற்குச் சென்று இரவு 10 மணிக்கு நேராக ரயில்வே ஸ்டேஷனுக்கு வரும்படி ஏற்பாடு. அதனால் மாணவர்கள் வீடு செல்லும் ஆவலில் இருந்தனர் — கூச்சல் அடக்க முடியாததாகி விட்டது. "காக்கா மூக்கா" என்று முறை வைத்துக் கூவ ஆரம்பித்தனர்.


திடீரென்று மின்சார விளக்குகள் அணைந்தன. ஒரே கூச்சல். சிலர் குதித்து எங்கேயோ ஓடினர். மேஜையையும் பெஞ்சியையும் அடித்து நொறுக்கினர். திடீரென்று வேம்பு அய்யர் "ஐ..." என்று கூச்சலிட்டது கேட்டது.



"என்னுங்க, ஸார்! உங்க நாய் இப்படி முரண்டு பண்ணி இழுக்குதுங்களே! நம்ம நாய், பின்னாடி வர சோடு தெரியாம, எப்படி வரது, பாருங்களேன்!"




காஞ்சனமாலா - புஷ்பவல்லி



# பால நாகம்மா

| | | |
|---|---|---|
| சென்னை | வெலிங்டன் | 8வது வாரம் |
| மதுரை | நியூ ஸினிமா | 8வது வாரம் |
| கோயமுத்தூர் | ராஜா டாக்கீஸ் | 8வது வாரம் |
| சேலம் | நியூ ஸினிமா | 8வது வாரம் |
| பெஜவாடா | மாருதி ஸினிமா | 8வது வாரம் |
| சிகந்தராபாத் | சித்ரா டாக்கீஸ் | 8வது வாரம் |
| ராஜமகேந்திரம் | கிருஷ்ணா பிக்சர் | 8வது வாரம் |
| குண்டூர் | ஜூபிட்டர் | 8வது வாரம் |
| காகினாடா | கிரௌன் | 8வது வாரம் |
| விசாகப்பட்டணம் | பூர்ணா தியேட்டர் | 8வது வாரம் |
| மசூலிப்பட்டணம் | மினர்வா | 8வது வாரம் |
| தெனாலி | வெங்கடேஸ்வரா | 8வது வாரம் |
| கர்னூல் | ராதாகிருஷ்ணா | 8வது வாரம் |
| திருநெல்வேலி | பாலஸ் டி வேல்ஸ் | 5வது வாரம் |
| பீமாவரம் | வெல்கம் | 4வது வாரம் |
| எல்லூர் | ராமகிருஷ்ணா | 4வது வாரம் |
| காரைக்குடி | கிருஷ்ணா | 4வது வாரம் |
| கும்பகோணம் | டைமண்ட் | 4வது வாரம் |


சென்னையில் வெள்ளி, சனி, ஞாயிறு 3 காட்சிகள் 2-15, 6-15, 10-0
திங்கள், செவ்., புதன், வியா. 2 காட்சிகள் 2-15, 6-15





கூடிய சீக்கிரம் வருகிறது ......

பெங்களூர் - ஸாகர் டாக்கீஸ்
திருச்சினாப்பள்ளி-ராஜா டாக்கீஸ்
விஜயநகரம்-கிருஷ்ணா ஸினிமா
நெல்லூர் - விநாயக் ஸினிமா


Chockan
தந்தி: ராஜா  போன் 81
P.A. ராஜூசெட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்

அவர் கைகுட்டையை எடுத்துத் தன் முகத்தில் எறியப்பட்ட ஏதோ வழ வழப்பான எண்ணெய் வஸ்துவைத் துடைக்கலானார். அவரது வாயில் சென்று விட்ட ஒரு சிறிதளவு வஸ்துவினால் அவர் தன்மீது எறியப்பட்டது பாதாம் அல்வா என்று ஊகித்துக் கொண்டார்.

தலைமை ஆசிரியர் மாணவர்களின் செய்கைகளைப் பற்றிச் சில கடுஞ் சொற்களும், வேம்பு ஐயரின் பிரசங்கத்தைப் பற்றிப் பாராட்டுரைகளும் சொல்லி, அவசரமாக வந்தனோபசாரம் கூறி விட்டுக் கூட்டத்தைக் கலைத்தார். சில நிமிஷங்களுக்குப் பிறகு விளக்குகளும் எரிய ஆரம்பித்தன.

இரவு 9 மணிக்கு வேம்பு அய்யரின் வீட்டில் இரு துர்ப்பாக்யப் பிரகிருதிகளைப் பார்க்கிறோம். நிசப்தம். அவர்கள் கட்டின கோட்டையெல்லாம் விழுந்து விட்டது. கர்ணனாக இருந்தாலும் அவன் முகத்தில் முதல் நிமிஷம் பாதாம் அல்வாவை அடித்து விட்டு அடுத்த நிமிஷம் ஐம்பது ரூபாய் இனாம் கேட்டால் கொடுப்பானோ என்பது சந்தேகம் தான்.

"டேய் கோபு, பாதாம் அல்வாவை நீயா அடித்தாய்?"

"இல்லேடா மாமா, அந்த மடையன் சாமா......அவனை எவ்வளவோ சமாதானப் படுத்திக் கொண்டே வந்தேன். திடீரென்று என் கையிலிருந்து பிடுங்கி அடித்து விட்டான்."

"இப்போ என்னடா பண்ணுவது. 10 மணிக்கு வண்டியாச்சே?"

"க்ஷவரம். நீதானே குரங்கு வாழைப் பழம் யோசனை சொன்னாய். குரங்கைச் சாகக் கொடுத்து ஆண்டி மாதிரி உட்கார்ந்திருக்கிறோம்; — வர முடியவில்லையென்று ஏதாவது சாக்குச் சொல்லி அனுப்பணும்."

இப்போது வளையல் சப்தம் கேட்டது. ஏதோ பாட்டின் முண முணப்பும் கேட்டது. பிறகு ஜவ்வாது வாசனை முன்னால் வர பின்னால் வேம்பு அய்யர் மனைவி தங்கம் காட்சி யளித்தாள்.

"ஏண்டா எங்கேடா போனேள் இரண்டு பேரும்? சாப்பிடக் கூட வரவில்லை; இன்னிக்கி நானும் வாத்தியாரும் போய் வீணை வாங்கிக் கொண்டு வந்தோம் — உங்களுக்கு சொல்ல மறந்து போச்சு. முந்தா நாள் அவர் திடீரென்று வீணை வாங்குவதற்கும் பாட்டு வாத்தியார் வைப்பதற்கும் ஒத்துக் கொண்டார். உங்களுக்காகக் கூட ஏதோ ஹம்பிக்குப் போக..."

இருவரும் துள்ளி எழுந்தனர்.

"சித்தி, எங்கே அந்தப் பணம்?" என்றான் கோபு.

"அத்திம்பேர் எங்கே?" என்றான் சீனு.

"உள்ளே இருக்கார். அவர் வந்தவுடன் 'வென்னீர் போடு; குளிக்கணும்' என்றார். போட்டுக் கொடுத்தேன். இப்போது குளிக்கிறார்."

"சித்தி—ஓடு—ஒரே ஓட்டம்... பணத்தை முதலில் கக்கிவிட்டு அப்புறம் பேசு" என்றான் கோபு.

தங்கம் உள்ளே ஓடினாள்.

"மாமா, கட்டினாயா மூட்டையை?"

"எப்பவோ கட்டியாச்சு!"


"நீட்டு கம்பியை!"

அடுத்த நிமிஷம் இருவரும் ஸ்டேஷனை நோக்கிப் பறந்து கொண்டிருந்தனர். வேம்பு அய்யர் அன்று முதல் பிரசங்கம் செய்வதையே நிறுத்தி விடத் தீர்மானித்ததோடு, பாதம் அல்வா ஆசைக்கும் ஒரு முழுக்குப் போட்டு விட்டார்.



தவறாமல் பெப்ச் சாப்பிட்டு
தொண்டைக்கும் சுவாசப்பைக்கும்
பாதுகாப்பு அளியுங்கள்

இருமல், ஜலதோஷம், சீதளம், தொண்டை உபாதை அல்லது சுவாச பலஹீனம் இவற்றால் வருந்தினால் கிருமிநாச சுவாச மாத்திரையான பெப்ச் தான் விரைவில் குணமளிக்கும். பெப்ச் கிருமிகளை தேடிப்பிடித்து நசிக்கச் செய்கிறது. இது தொண்டைக் கட்டை அகற்றி, கபத்தை அறுத்து, மார்புக்கும் சுவாசப்பைக்கும் எப்பொழுதும் சிறந்த பாதுகாப்பை அளிக்கிறது. எல்லா வியாபாரிகளும் பெப்ச் ரூ. 1/-க்கு விற்கின்றனர். ஏஜண்ட்ஸ்:

மெஸர்ஸ். தாதா & கோ.,
பி. டி. மதராஸ்.
பெப்ச் சாப்பிடுங்கள்

PEPS
கிருமிநாசன சுவாச மாத்திரைகள்

# "மகா யோக்கியர்கள்!!"

"சசி"

வண்டியை விட்டு நானும் மங்களமும் இறங்கினதுதான் தாமதம். உடனே மூன்று பிச்சைக்காரச் சிறுவர்கள் ஓட்டமாக ஓடிவந்து, "பசியா இருக்கு, சாமி! புண்ணியம் உண்டு, தாயே! காலணா கொடுத்தா பளம் வாங்கி சாப்பிடுவேனுங்க!" என்று கெஞ்சிய வண்ணம் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஸ்வாமி தரிசனத்துக்குப் போன இடத்தில் ஏழைகளுக்குத் தர்மம் செய்ய வேண்டியது என்னவோ புண்ணியமான காரியந்தான். என்றாலும், பிச்சைக்காரர்களின் வாத்தைகளில் எனக்கு அவ்வளவாக நம்பிக்கை ஏற்படுவதில்லை. "காலணா குடுங்க, இட்லி வாங்கிச் சாப்பிடறேன்" என்று என்னிடம் பிச்சை கேட்க வந்த எவ்வளவோ பிச்சைக்காரர்களுக்கு அவர்கள் விரும்பிய காலணாவைக் கொடுத்துப் பார்த்திருக்கிறேன். ஆனால், அவர்களில் எவனும் அந்தக் காலணாவை வாங்கிக் கொண்டதும் நேராகச் சென்று இட்லி வாங்கிச் சாப்பிட்டதை நான் கண்டதே யில்லை. அதற்கு மாறாக, என் கண் முன்பாகவே அந்தப் பிச்சைக்காரர்கள் அதே பல்லவியைச் சொல்லியபடி மற்ற ஜனங்களிடமும் சென்று பிச்சை வாங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன்.


இதனால்தான் எனக்கு அந்தச் சிறுவர்களிடம் கொஞ்சமாவது கருணை உண்டாக வில்லை. ஆனால், மங்களம் பேசாமல் இருந்தால் தானே? "பாவம், சிறுசுகள்! ஆளுக்குக் காலணாதான் கொடுங்களேன்!" என்று அவர்களுக்குப் பரிந்து பேசினாள். என்றாலும், அந்தச் சிறுவர்களுக்குக் கண்ணை மூடிக்கொண்டு தலைக்குக் காலணா வீதம் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. எனவே, "டேய் பசங்களா! உங்களிடம் நான் காசாகக் கொடுக்கப் போவதில்லை. அதோ அந்தக் கடையிலிருந்து வாழைப் பழந்தான் வாங்கிக் கொடுக்கப் போகிறேன். என்ன, சம்மதந்தானா?" என்று அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர்கள் சம்மதப்பட மாட்டார்கள் என்றே நான் எதிர் பார்த்தேன். ஆனால் அவர்களில் எவனும் அந்த யோசனையை ஆக்ஷேபிக்க வில்லை. "அப்படியே செய்யுங்க, சாமி! ரொம்ப சந்தோசம்!" என்று எல்லாருமாகச் சேர்ந்து சொன்னார்கள்.



அப்பொழுதும் எனக்கு அவர்களிடம் நம்பிக்கை வரவில்லை. "டேய் பசங்களா, நான் வாங்கிக் கொடுக்கிற வாழைப் பழங்களை நீங்கள் என் எதிரிலேயே சாப்பிட வேண்டும். அவற்றை வாங்கி வைத்துக் கொண்டு பிறகு அந்தக் கடைக்காரனுக்கே விற்று விடுவீர்களோ என்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது!" என்று நான் மேலும் ஒரு நிபந்தனையைப் போட்டேன். அவர்கள் அதற்கும் சளைக்கவில்லை. "ஓ! உங்க எதிரிலேயே சாப்பிடறோம்" என்று ஆரவாரம் செய்தார்கள்.

அது எனக்கு மிகவும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. வெகு யோக்கியமாக, நம் கண் முன்னாலேயே பழத்தை வாங்கிச் சாப்பிட முன் வரும் அதிசயத்தை நான்கண்டதே யில்லை. ஆகவே, மிகுந்த திருப்தியோடு அந்தச் சிறுவர்களுக்கு வாழைப் பழங்கள் வாங்கிக் கொடுத்துவிட்டு நானும் மங்களமும் ஸ்வாமி தரிசனத்துக்குப் போனோம்.


இந்த விஷயத்தைப் பற்றி அந்த ஊர்க் கோவில் குருக்களிடம் நான் பிரஸ்தாபித்த போது அவரும் என்னைப் போல் ஆச்சரியப் படுவார் என்று நினைத்தேன். ஆனால் அவர் சிரித்துக் கொண்டே, "நீங்கள் இந்த ஊருக்குப் புதுசோல்லியோ? அதான் ஏமாந்து போனேள்! அந்தப் பிச்சைக்காரப் பசங்கள் எல்லாம் அந்தப் பழக் கடைக்காரனுடைய பிள்ளைகள் தான்! தனக்கு வியாபாரம் நன்னா நடக்கணுமேன்னு இது மாதிரி தன் பிள்ளைகளையே தயார் பண்ணி விட்டிருக்கான்!" என்றார் அவர்.



For COUGHS, COLDS, BRONCHITIS

இருமல், ஜலதோஷம், மார்சளி நோய்களுக்கு

Angier's Emulsion ஆன்ஜியர்ஸ் எமல்ஷனில் பிராணிகளின் எண்ணெய் எதுவும் கலப்பில்லை. கைப்படாமல் தயாரித்தது. ஆகவே சகல ஜாதியினரும், மதத்தினரும் யாதொரு ஆக்ஷேபணையின்றி உபயோகிக்கலாம்.




ANGIER'S EMULSION



மணல் மூட்டைகளும் செங்கல் சுவர்களும்
உங்கள் உயிரை பாதுகாக்கலாம்
அவைகள் தவறிவிடின்

நீங்கள் எங்களிடம் இன்ஷூர் செய்திருந்தால் நாங்கள்
உங்களை நம்பி நிற்பவர்களை பாதுகாக்கிறோம்.

ப்ரத்யேக ப்ரீமியமில்லாமல் ஸிவிலியன்கள் உயிர்மீது
யுத்த அபாய இன்ஷூர் தற்பொழுது செய்யப்படுகிறது

| | | |
|---|---|---|
| இதுவரை செலுத்தப்பட்ட உரிமைகள் | ரூ. | 26,00,00,000 மேல் |
| அமுலிலிருக்கும் பாலிஸிகள் | ரூ. | 85,50,00,000 ,, |
| 1941ஆம் வருஷ வருமானம் சுமார் | ரூ. | 5,00,00,000 |
| நிதிகளின் தொகை சுமார் | ரூ. | 30,00,00,000 |

ஓரியண்டல்
கவர்ன்மெண்ட் செக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

ஸ்தாபிதம் 1874. தலைமை ஆபீஸ் : பம்பாய்.

கிளை ஆபீஸ்கள் :
ஓரியண்டல் பில்டிங்ஸ், அரமனைக்காரத் தெரு, ஜி. டி., மதராஸ்.
திருச்சி — மதுரை — கோயமுத்தூர்.





SALES DEPOT:- ஸாரதா ஸ்டோர்ஸ் அம்மன் சன்னதி மதுரை.


# பேஷான சமையல்!

*"கௌதமன்"*

"என்ன சமையல் இது! நாய் கூடத் தீண்டாதே இதை! கொஞ்சமாவது ருசி உண்டா? பதார்த்தத்தையாவது திருப்தியாய்ச் சாப்பிடலா மென்றால் முடியவில்லையே! தினமும் இதே இழவு! பக்கத்து வீட்டுப் பார்வதிப் பாட்டியையாவது கேட்டு அவர்களிட மிருந்து நீ சமையல் செய்யக் கற்றுக் கொள்ளக் கூடாதா? நேற்று அவர்கள் வீட்டு டொமாடோ ரசம் கொண்டு வந்தாயே, அது எவ்வளவு ருசிகரமா யிருந்தது!" என்று சாப்பிட உட்கார்ந்திருந்த ரங்கய்யர் சரமாரியாய்ப் பொழிந்தார். தமது மனைவி மீனும்பாள் மீது கோபித்துக் கொள்ளக் காரணம், அவள் செய்துள்ள ரசம் அவருக்குப் பிடிக்கவில்லை என்பதுதான்.


ரங்கய்யர் வீட்டில் போஜன வேளை வந்து விட்டால் ஒரு பெரிய அமளிதான் நடக்கும். அக்கம் பக்கத்து வீட்டிற்குத் தெரிவிக்காமல் சாப்பிட்டு எழுந்திருப்பது அவரால் முடியாத காரியம். மீனும்பாளுக்கு அலுப்பு உண்டாகி விட்டதென்றாலும் இவ்வித உபந்நியாசத்தைக் கேட்டுக்கேட்டுத்தன் கணவனது மனப்பான்மையை அறிந்து அவருக்குத் திருப்தி யளிக்க வேண்டு மென்று விரும்பினாள். ஆகவே சமையல் விஷயத்தில் கவனமும் சிரத்தையும் செலுத்தி வெகு ஜாக்கிரதையாய்ப் பதார்த்தங்களைப் பக்குவப் படுத்தித் தன் புருஷனுக்குப் பரிமாறினாள். என்றாலும் ரங்கய்ருக்கு மட்டும் அந்தப் பக்குவங்கள் திருப்தியே தரவில்லை. "குழம்பு கொதித்தது போதாது," "கறி வேகவே யில்லை," "இது ரசமா, குழம்பா? இப்படிப் பருப்பைக் கொட்டி யிருக்கயே?" — என்று எதையாவது ஒன்றைக் குறை சொல்லும் சுபாவம் போகவில்லை. ஒரு நாளாவது "சமையல் பேஷ்!" என்று அவர் சொன்னதே கிடையாது.

இவ்விதம் மனைவியின் சமையலில் குறை கூறும் சுபாவத்தினால் தான் ரங்கய்யர் ஆரம்பத்தில் கூறியபடி, தன் மனைவியைக் கோபித்துக் கொண்டிருந்தார். உடனே மீனும்பாள் சட்டென்று எதையோ ஞாபகப் படுத்திக் கொண்டது போல், "அந்த ரசம் சாதத்தை அப்படியே ஒதுக்கி வையுங்கள். பார்வதிப் பாட்டி வீட்டிலிருந்து கொஞ்சம் ரசம் கொண்டு வந்து போடுகிறேன்" என்று சரேலென வெளியே சென்று, பக்கத்து வீட்டிலிருந்து ஒரு பாத்திரத்தில் ரசத்தை வாங்கிக்கொண்டு வந்து அதை இலையில் பரிமாறினாள். ரங்கய்யரும் அந்த ரசத்தைச் சாதத்தில் கலந்து ஒரு கவளம் வாயில் போட்டு மென்று விழுங்கினார். உடனே "வெகு பேஷ்!" என்று அந்த ரசத்தின் மகிமையைப் புகழ்ந்து பேச ஆரம்பித்து விட்டார்.

"பார்த்தயா! 'பக்கத்தாத்துச் சமையல் எவ்வளவு நன்றா யிருக்கு!' என்று சொன்னால் முகத்தைக் கோணிக்கொண்டு எரிஞ்சி விழுகிறயே! அவாள் வீட்டிலும் டொமாடோ ரஸம்தான். இதற்கும் நீ செய்துள்ளதற்கும் எவ்வளவு வித்தியாசம்! இன்னும் கொஞ்சம்அந்த ரசத்தைக் குத்து" என்று அவர் அந்த ரசத்தையே மேன்மேலும் கலந்து கொண்டார். பக்கத்து வீட்டுச் சமையலை

அன்றைய தினம் அவர் புகழ்ந்ததினால் மீனாம்பாளுக்குக் கொஞ்சம் கூட வெறுப்பில்லை; விருப்பமேதான். அடக்கமுடியா ஆனந்தங் கொண்டாள். உடனே பார்வதிப் பாட்டியிடம் ஓடித் தன் கணவன் திருப்தியடைந்த செய்தியைத் தெரிவித்தாள்.

ரங்கய்யர் தாம்பூலம் எடுத்துக் கொண்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். பார்வதிப் பாட்டி வந்து, "ஏது, இன்று வெகு ரக்சியமாய்ச் சாப்பாடு முடிந்து விட்டது போலிருக்கிறதே" என்று விசாரித்தாள்.




"ரகசியம் என்ன இதில்! நாவிற்கு ருசியில்லாத சமையலை எப்படித்தான் சாப்பிடுவது! பசியோடு இலைமேல் உட்காரும் போது, எதையாவது வெந்ததும் வேகாததுமாய்ப் போட்டால் கூச்சல்தான். இன்றைய தினம் உங்கள் வீட்டு ரசம் அமிர்தம் போலிருந்தது" என்று ரங்கய்யர் பாட்டி வீட்டு ரசத்தின் பெருமையையும் தமக்குண்டான திருப்தியையும் தெரிவித்தார். அதற்குப் பார்வதிப் பாட்டி, "ஏன், மீனாம்பாளுந்தான் ரஸம் பண்ணியிருந்தாளே இன்று?" என்று சொன்னதும், ரங்கய்யருக்குக் கோபம் பொங்கி எழுந்தது.

"போதும், அவள் செய்த ரசமும் அவளும்!" என்று அவர் வெடுக்கெனக் கடிந்தார்.


இதைக் கேட்டதும் பார்வதிப் பாட்டிக்குச் சிரிப்பை யடக்க முடியவில்லை. கொல்லெனச் சிரித்து விட்டுப் பின்னர், "ரங்கய்யரே! நீர் மகா பொல்லாதவர்! வீணாய் நித்தியம் மீனாளின் மனம் நோகும்படி அவள் செய்துள்ள சமையலில் கோணல் கூறுகிறீரே! பக்கத்து வீட்டுச் சமையலை மட்டும் புகழ்கிறீரே! மீனாளுக்குச் சமைக்கத் தெரியாதா? அவள் சமைத்ததைச் சாப்பிட்ட நாளெல்லாம் எங்கள் சங்கரன் புகழாமல் இருப்பதில்லை. நானே மீனாளுக்கு எத்தனைவிதச் சமையலைக் கற்பித்திருக்கிறேன்! இன்று நீர் சாப்பிட்ட எங்கள் வீட்டு ரசமும் மீனாள் செய்த ரசமும் ஒன்றேதான்! ஒரு வித்தியாசமுமில்லை. இரண்டும் மீனாள் செய்ததுதான். ஒரு பாதியை எங்கள் வீட்டில் வைத்தாள். அதையே எங்கள் வீட்டு ரசம் என்று சொல்லி உமக்குப் போட்டாள். உங்கள் வீட்டில் வைத்த பாதியில் உள்ள ரசம் உமக்குப் பிடிக்கவில்லை; ஆனால் எங்கள் வீட்டில் வைத்த பாதியில் உள்ளது பிடித்தது" என்று விஷயத்தை விளக்கி விட்டாள்.

அதைக் கேட்டதும் ரங்கய்யர் எவ்விதம் திகைத்துப் போயிருப்பார் என்று சொல்ல வேண்டியதில்லை!

ஸ்ரீரங்கப்பட்டினம் பாலம்

இந்த சரித்திரப் பிரஸித்தமான பாலம் ஆத்ம சுத்திக்காக காவேரி புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யப்போகும் ஆயிரக் கணக்கான ஜனங்களின் மனதிற்கு ரொம்ப பிடித்தமான நடமாட்ட ஸ்தலமாகும்.




ஹமாம் ஸோப்பின் புது வடிவத்தை கவனிக்கவும்


இந்தியாவில் எங்கும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் தேக சுத்திக்காக குளிர்ச்சியானதும் உற்சாக மூட்டுவதுமான ஹமாம் ஸோப்பையே உபயோகிக்கவும் செய்கிறார்கள்.

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா:
1, வாரன்ரோட், பீமன்னப்பேட்
மைலாப்பூர் — மதராஸ்

# ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு




# கஷாங்கா

"பாலு"


ஒரு ஊரில் குப்பன் என்பவன் கூலி வேலை செய்து வாழ்ந்து வந்தான். அவனிடம் ஒரு நாய் இருந்தது. அதன் பெயர் "கஷாங்கா". அது வெகு அழகா யிருக்கும்.

குப்பன் எங்கே சென்றாலும் நாயும் கூடவே செல்வது வழக்கம். அதனால் அவன் தன்னிடம் உள்ள சாமான் வாங்கும் கூடையை அதன் வாயில் வைத்து விட்டுக் கை வீசிக் கொண்டு நடப்பான். ஒரு நாள் அதிக வேலை இருந்ததால் குப்பன் காலையில் செல்ல வேண்டி யிருந்தது. அப்பொழுது குளிர் காலம். நாயும் வாயில் கூடையைக் கவ்விக் கொண்டு அவன் பின்னாலேயே சென்றது. அப்பொழுது ஒரு நண்பன் குப்பனை ஒரு வீட்டிற்குள் அழைத்துச் சென்றான்.


கஷாங்கா வெகு நேரம் காத்திருந்தும் குப்பன் திரும்பி வரவில்லை. உடனே அது கத்திக் கொண்டு தெரு வழியாக ஓடிற்று. அது பசியினால் வந்த களைப்பினால் ஒரு வீட்டிற்கு எதிரில் போய் நின்று வாள் வாள் என்று கத்திற்று. அந்த வீடு ஒரு பெரிய ஸர்க்கஸ் முதலாளியினுடையது. ஸர்க்கஸ் முதலாளி வெளியே வந்து பார்த்தார். கஷாங்கா பார்வைக்கு வெகு நன்றாக இருந்தது. அதைத் தடவிக் கொடுத்தார். அதை உள்ளே அழைத்து வந்து அதற்குப் பழமும் பாலும் கொடுத்தார். படுத்துக் கொள்ள ஒரு இடமும் கொடுத்தார்.

இரவு சுமார் பன்னிரண்டு மணி இருக்கும். அங்கு வந்த ஒரு பூனைக்கும் கஷாங்காவுக்கும் சண்டை வந்து விட்டது. நாயும் பூனையும் கத்தின. உடனே முதலாளி எழுந்து வந்து பார்த்தார்.

முதலாளி தன் சாட்டையால் கீழே அடித்து விட்டுச் சில வார்த்தைகளைச் சொன்னார். உடனே பூனை பேசாமல் படுத்துக் கொண்டு விட்டது. அதைப் பார்த்துக் கஷாங்காவும் படுத்துக் கொண்டது.



மறு நாள் காலையில் முதலாளி எழுந்து எல்லா மிருகங்களுக்கும் ஆகாரம் போட்டு விட்டு, நாய்க்கும் பால், பழம் போட்டு விட்டு அதை ஒரு கம்பத்தில் கட்டினார். பிறகு அவர் ஒரு கூண்டின் அருகில் சென்று ஒரு பூனை, வாத்து, ஆடு மூன்றையும் இழுத்து



வந்தார். ஏதோ ஒன்று சொல்லி, "ஒன்று! இரண்டு! மூன்று!" என்று எண்ணினார். முதலில் ஆடும், அதன் மேல் வாத்தும், அதன் மேல் பூனையும் நின்றன. இதைப் போல் அநேக வித்தைகளைச் செய்து அவைகளைப் பழக்கினார். இதைக் கஷாங்கா பார்த்துக் கொண்டே யிருந்தது.

பாவம்! மறுநாள் காலையில் முதலில் முதலாளி கூண்டைப் பார்த்த போது வாத்து இறந்து கிடந்தது. உடனே அவர் கஷாங்காவைக் கூப்பிட்டு ஏதோ சொன்னார். முதல் நாள்போல் ஆட்டின் மேல் பூனை நின்றது. பூனையின் மேல் வாத்துக்குப் பதிலாகக் கஷாங்கா நின்றது. இதைப் போல் இன்னும் அநேக வித்தைகளை அவர் கற்றுக் கொடுத்தார். அதுவும் தவறாமல் செய்தது. முதலாளிக்கு அளவில்லாத சந்தோஷம் வந்து விட்டது. அதற்கு நிறைய பழம் பால் எல்லாம் கொடுத்தார்.

மறு நாள் ஸர்க்கஸில் ஒரே கூட்டம். எள்ளைப் போட்டால் எள்ளு விழாது. கஷாங்கா அநேக வேடிக்கைகளைச் செய்தது. ஒரு வித்தையில் கஷாங்கா முன்னங்கால்களால் தொப்பியைத் தூக்கிக்கொண்டு ஒவ்வொருவரிடமாக வந்தது. எல்லாரும் சந்தோஷத்துடன் காசுகளைப் போட்டனர். அதே சமயம் கூட்டத்திலிருந்து "டேய்! நம்ப 'கஷாங்கா' டோய்!" என்ற சப்தம் கேட்டது. நாய் திரும்பிப் பார்த்தது. அங்கே தன் எஜமானனைக் கண்டவுடன் துள்ளிக் குதித்து அவனிடம் ஒரே ஓட்டமாக ஓடிற்று. அவனுடைய சொக்காயைப் பிடித்து இழுத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி ஓடிற்று. அன்று வந்திருந்தவர்கள் எல்லாரும் கஷங்காவைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டு போனார்கள்.



## விகடன் பேச்சு

ஒரு பிரபலஸ்தர் ஒரு சபையின் வருஷாந்திர விழாவில் விருந்துக்குப் பின் பிரசங்கம் செய்வதாக ஏற்பாடாகியிருந்தது. விருந்துச் சாப்பாடு ஆன பின், விருந்தினர்கள் அளவளாவிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

அப்போது சபைக் காரியதரிசி மேற்படி பிரபலஸ்தரிடம் சென்று, "ஸார்! இப்போதே உங்கள் பிரசங்கத்தை ஆரம்பித்து விடுகிறீர்களா? அல்லது, இன்னும் சிறிது நேரம் விருந்தினர்கள் சந்தோஷமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கட்டுமா?" என்று கேட்டார்.

* * *

"என் முதலாளி அவர் சொன்ன வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்ளாவிட்டால் அவர் கடையில் இனிமேல் கால் வைக்க மாட்டேன்!"

"அப்படிக் கோபமூட்டும்படி உன்னை என்ன சொல்லி விட்டார்?"

"'நீ வேலைக்கு தேவையில்லை' என்றார்!"

* * *

முதல் குமாஸ்தா :—நான் வீட்டுக்கு ஆபீஸ் வேலையைச் சுமந்து கொண்டு போகிறதில்லை.

இரண்டாவது குமாஸ்தா :—நானும் அப்படித்தான். எனக்கும்தான் போகிறதற்கு முன் வீட்டில் வேலை காத்துக் கொண்டு கிடக்கிறது!

* * *

ஒரு வியாபாரி பல இடங்களில் கடன் வாங்கி விட்டார். அவருடைய ஆப்த நண்பர் ஒருவர் அவரை சந்தித்து, "நான் உன்னைப்பற்றி என்னவெல்லாமோ கேள்விப் படுகிறேனே! ஏன்டா இப்படி வந்தது?... இத்தனை கடன் இருக்கும்போது எப்படி உனக்குத் தூக்கம் வருகிறது?" என்று கேட்டார்.

"நான் தூங்குவது கிடக்கிறது அப்பா! எனக்கு கடன் கொடுத்திருக்கிறவர்கள் எப்படித் தூங்குவார்கள் என்பதை நீ யோசித்துப்பார்த்தாயா?" என்று கேட்டார் வியாபாரி.

"உங்கள் ஆபீஸ் சாமான்கள் கொள்ளை போனாலும் நஷ்டம் அடையாமல் இன்ஷூர் செய்து விடுங்கள்" என்றார் இன்ஷூரென்ஸ் ஏஜெண்ட்.

"அப்படியே செய்தால் போச்சு! கெடியாரத்தை மட்டும் இன்ஷூர் செய்ய வேண்டாம். அதைத்தான் என் குமாஸ்தாக்கள் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே!" என்று பதில் சொன்னார் முதலாளி.

* * *

கதாசிரியர் :—பத்து வருஷம் உழைத்த பிறகுதான் எனக்குக் கதை எழுதும் சக்தியே கிடையாது என்பதை நான் கண்டு கொண்டேன்.

மற்றவர் :—அதோடு கதை எழுதுவதை விட்டு விட்டீராக்கும்?

கதாசிரியர் :—முடியவில்லையே! என் பெயர் அதற்குள் 'பிரபலமாகி விட்டதே!

* * *

"ஒரு பெரிய பணக்காரருடன் கூட்டு வியாபாரம் ஆரம்பித்தேன். அவருடைய பணத்தையும் என்னுடைய அநுபவத்தையும் போட்டோம்..."

"சரி; என்ன ஆயிற்று?"

"ஒரே வருஷத்தில் என் வியாபார அநுபவம் அவருக்குப் போயிற்று. அவருடைய பணம் எனக்கு வந்தது. அவ்வளவுதான்!"

* * *

ஒரு பெரியவர் தனது சிஷ்னிடம் பகவத் கீதையின் பெருமையை விளக்கி விட்டு, கடைசியில், "குழந்தை! உனக்கு மனத் தளர்ச்சி ஏற்படும் போதும் கஷ்ட காலம் சம்பவிக்கும் போதும், பக்கத்தில் நின்று காக்கும் புஸ்தகம் எது என்பது தெரிந்து கொண்டாயா?" என்று கேட்டார்,

"தெரிந்து கொண்டேன் ஸ்வாமி: அது பாங்கி 'செக்' புஸ்தகம்!" என்றான் சிஷ்ன் பளிச் சென்று.







# துப்பறியும் சாம்பு

"தேவன்"

## 14. குறட்டையும் கொட்டாவியும்

ஆனந்தமான நித்திரையில் ஆழ்ந்திருந்தான் சாம்பு. டணார் டணார் என்று பதினொரு தடவை கடிகாரம் மணி அடித்துங் கூட அவன் நித்திரை கலையவில்லை. படுக்கையில் புரண்டு கூடப் படுக்காமல், இந்த உலக சிந்தனையே இல்லாமல் அவன் தூங்கினான். திருட்டுக் கேஸ்"களும் கொள்ளைகளும், கொலைகளும் துப்பறிதலும், அபாயங்களும் துப்பாக்கிகளும் அவன் சிந்தனையில் இப்போது இல்லை. ஆனால் ஒரு 'சிறந்த' துப்பறிபவன் தூங்கினால் இந்தப் பாழும் உலகம் அதைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்குமா? அவனை எழுப்பித்தானாக வேண்டும் என்பதற்கே போல் இன்ஸ்பெக்டர் கோபாலன் வீட்டில் டெலிபோன் மணி அடித்தது. அப்போதுதான் 'ட்யூடி'யிலிருந்து திரும்பி உத்தியோக உடைகளைக் கூடக் களைந்தெறியாத கோபாலன் ரிஸீவரைத் தூக்கிக் காதில் வைத்துக் கொண்டார்.

"இன்ஸ்பெக்டர் கோபாலன் இருக்கிறாரா?" என்று கேட்டது ஒரு குரல்.

"நான்தான் பேசுகிறேன்! என்ன விசேஷம்?" என்றார் கோபாலன்.

"'பங்களூர் ஹவுஸ்' விருந்து கேதாரி லால் பேசுகிறேன். நீங்கள் உடனே இங்கு வரவேண்டும்."

பெயரைக் கேட்டவுடன் கோபாலனின் பேச்சிலும் பாவனையிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டது. பரிவும் மதிப்பும் அவற்றில் தோன்றின. "இதோ வந்துவிட்டேன்...என்ன விசேஷம்?" என்று கேட்டார் அவர்.

கேதாரிலால் :— நீங்கள் வருவது உத்தியோக தோரணையில் அல்ல. நான் ஒரு தர்ம சங்கடமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். வாயைத் திறந்தால் கெட்ட பெயர் வரும்! சும்மா இருந்தால் முட்டாள் பட்டமும் பொருள் நஷ்டமும் தான் வரும். நீங்கள் வந்தால்......

கோபாலன் :— இன்னும் விஷயத்தைச் சொல்லவில்லையே!

கேதாரி :—இன்று என் வீட்டில் விருந்து ஒன்று ஏற்பாடுசெய்திருந்தேன். நான் வியாபாரம் ஆரம்பித்து இன்றோடு இருபத்தைந்து வருஷம் ஆகிறது. அதற்குச் சில முக்கியமான நண்பர்களை வருவித்திருந்தேன். அது முதல் மடத்தனம். சாப்பாட்டுக்கு முந்தி என்னிடம் இருக்கும் மதிப்புள்ள வைரங்களையும் இதர கற்களையும் அவர்களிடம் காண்பித்தேன். அது இரண்டாவது மடத்தனம். என்னிடம் புளியங் கொட்டைப் பிரமாணத்தில் ஒரு வைரம் இருந்தது உங்களுக்குத் தெரியும். அந்தக் கல்லை இப்போது திடீரென்று காணவில்லை. இங்கேயே விருந்தினர்கள் எல்லாரும் இருக்கிறார்கள்.

கோபாலன்:—விருந்துக்கு வந்தவர்களில் ஒருவர்தான் எடுத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

கேதாரி:— ஆமாம்; ஆனால் அதைச் சொல்ல முடியவில்லை. அவ்வளவு பேரும் பெரிய மனிதர்கள், உறவினர்கள். நான் சொன்னால், ஒவ்வொருவரும் தங்களைத்தான் நான் சந்தேகிப்பதாக எண்ணிக் கொள்ளுவார்கள். இவர்களை நான் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி இன்னும் ஒரு மணி அவகாசம் வீட்டில் தங்கச் சொல்லலாம். நீங்கள் வந்து ஒரு கண்ணோட்டம் போட்டுக்கொண்டீர்களானால், பிறகு சாவகாசமாகப் பார்த்துக் கொள்ளலாம்.

கோபாலன்:— வருகிறேன்...... ஆனால் ஒரு விஷயம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது நீங்கள் 'சாம்பு' 'சாம்பு' என்று ஒரு பேர்வழியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

கேதாரி:— தெரியாது.

கோபாலன்:— என்ன போங்கள்! நீங்கள் எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்? சாம்புவின் பெயர் ஜகப் பிரசித்தி பெற்றுவிட்டதே! அவனிடம் கேஸைச் சொல்லி விட்டால் போதும். ஆஸாமியைப் பார்க்காமலேயே, இருந்த இடத்திலிருந்தே குற்றவாளியைப் பிடித்து விடுவான். அவன் எனக்கு மிகவும் ஆப்தன்.

கேதாரி:-ரொம்ப ஸந்தோஷம். அவரையும் கூட்டி வாருங்கள்...

கோபாலன்:— ஆனால் ஒரு விஷயம். அவர் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் அல்ல. ஆகையினால் அவர் உங்கள் வைரத்தைத் தேடிக் கொடுத்து விட்டால், நீங்கள் அவருக்குத் தகுந்த சன்மானம் செய்யவேண்டும்.

கேதாரி:— அதை நீங்கள் சொல்ல வேண்டுமா, ஸார்? கெட்டுப் போயிருக்கும் கல் பலஆயிரம் ரூபாய் பொறும். அதை அவர் கண்டு பிடித்துக் கொடுத்தால் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் ஒரு வைர மோதிரத்தை விரலில் உடனே போட்டு அனுப்புவேன்...சீக்கிரம் புறப்படுங்கள்!

கோபாலன் அழைக்க வந்தபோது சாம்பு சொப்பன லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஒரு திருடன் அவனைத் துரத்துகிறான். மாடிக்கு அவன் ஓடுகிறான். கதவைத் தாழ்ப்பாள் போடப் பார்க்கிறான். அது கழண்டு கொள்கிறது. திருடன் வந்து விடுகிறான். சாம்பு மேலும் ஓடி மாடியின் கைப்பிடிச் சுவரின்மீது ஏறுகிறான். திருடன் விடுவதாயில்லை. கீழே குதித்தால் மண்டை உடையும்; அகப்பட்டுக் கொண்டால் திருடனின் தடி மண்டையை உடைத்துவிடும். இதுதான் சாம்புவின் சொப்பனம். இந்த ஆபத்தான நிலைமையில் கோபாலன் அவனுடைய முதுகில் தட்டி, "ஓய்! கும்பகர்ணரே! எழுந்திரும், சொல்கிறேன்!" என்றார்.

சாம்பு திடுக்கிட்டு உளறிக்கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, "ஐயோ! நான் வந்துடறேன்" என்றான்-சொப்பனத்தில் கண்ட திருடனிடம்.

இன்ஸ்பெக்டர் சிரித்து, "அவ்வளவும் பொய்த் தூக்கமா? நம்மிடமே உம்முடைய வேலையைக் காண்பிக்கிறீரே! கிளம்பும் சொல்கிறேன்!" என்றார்.

சாம்புவுக்கு நன்றாக விழிப்புக் கொடுத்தது. அவன் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு காரில் அவனை ஏற்றி, தாமும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார் கோபாலன்.

போகும் வழியில் சாம்புவுக்குக் கேஸின் விவரங்களை விஸ்தரித்தார் கோபாலன். "கேதாரிலாலை உமக்குத் தெரியுமா? இந்த ஊரில் அவரை விடப் பெரிய வைர வியாபாரி கிடையாது!" என்று தொடங்கினார்.

சாம்புவுக்கும் வைரத்துக்கும் வெகு தூரம். அவன் ஆயுளில் அவன் ஒரு வைர நகையைத் தொட்டுப் பார்த்தது கூடக் கிடையாது. இருந்தாலும் கௌரவமாக, "ஆகா!" என்று தலையை ஆட்டினான்.

"அவரிடம் விலை மதிக்க முடியாத ஒரு வைரக் கல் இருந்தது. அதன் பிரமாணம் ஒரு சுண்டைக்காயத்தனை இருக்கும். அதை சமீபத்தில் ஒரு மகாராஜா விலைக்குக் கேட்டுப் பார்த்தும், கேதாரி விற்க மறுத்து விட்டார். அதை எப்படியாவது அடைவதென்று மகாராஜா கங்கணம் கட்டிக்கொண்டு எவ்வளவோ வேலைகள் செய்து பார்த்து விட்டார். கேதாரி தமது பிடிவாதத்திலிருந்து தளரவே யில்லை."

"உம்......" என்றான் சாம்பு. இந்த வைரக் கதை அவனுக்குச் சுவாரஸ்யப் படவே இல்லை. நல்ல தூக்கத்தில் கிளப்பி விடப்பட்டதால் அவனுக்கு மீண்டும் தூக்கம் கண்ணைச் சுற்றியது. சற்றுச் சாய்ந்துகொண்டு கேட்டு வரலாமே என்று மோட்டார் ஸீட்டில் சௌகரியமாகச் சாய்ந்து கொண்டான். கோபாலன் அவனை அதிகம் கவனியாமல்,



சென்னை-600 013

கேஸின் விவரங்களைச் சொல்லிக் கொண்டு வந்தார். சாய்ந்து கொண்ட சாம்பு கண்ணை மூடிக் கொண்டான். தலை சுழன்று ஒரு முறை ஆடியது; அவனை யும் அறியாமல் நித்திராதேவி அவனை ஆலிங்கனம் செய்து கொண்டாள். மோட்டாரின் "உர்ர்......" சப்தம் அவன் தூக் கத்திற்கு ஒத்து ஊதியது போலவே இருந்தது.

மோட்டார் 'பங்களூர் ஹவுஸ்' வாசலில் போய் ஒரு குலுக்க லுடன் நின்றது. சாம்புவின் தலை மோட்டார் முனையில் மோதிக் கொள்ளவே அவன் திடுக்கிட்டு மீண்டும் விழித்துக் கொண்டான்.

இன்ஸ்பெக்டர் அவன் கை யைப் பற்றிக்கொண்டு இறங்கி, அவன் காதோடு, "ஒன்றும் தெரிந்ததாகக் காண்பித்துக் கொள்ள வேண்டாம். ஏதோ எதேச்சையாக நாம் வந்ததாகவே இருக்கட்டும். ஆசாமிகளை மட் டும் நன்றாய்க் கவனித்துக் கொள் ளும்" என்று எச்சரித்தார்.

சாம்பு கண்களை மலர விழித்து, பிரசித்தி பெற்ற முட்டாள் பார்வை பார்த்தான். "சரியான வேஷம், ஐயா! என்னையே இப் படி ஏமாற்றி விடுவீர் போலி ருக்கிறதே!" என்றார் கோபாலன்.

கேதாரி பின் கையைக் கட்டிக் கொண்டு மாடி ஹாலில் உலாவி வந்தார். விருந்ினர்கள் கீழே விரி த்திருந்த ரத்தின கம்பளத்திலும், அங்கங்கே கிடந்த ஸோபாக்களி லும் உட்கார்ந்து பேசிக் கொண் டிருந்தார்கள். கோபாலனும் சாம் புவும் நுழைந்ததும் கேதாரி, "ஏது! அபூர்வமாக இருக்கி றதே!" என்று வரவேற்றார்.

இன்ஸ்பெக்டர் புரிந்து கொண் டவராக, "ஒரு கேஸ் விஷயமாக இந்தப் பக்கம் வந்தேன். உங்கள் வீட்டு மாடியில் வெளிச்சம் தெரிந் தது. நுழைந்தேன். ஏதோ விசே ஷம் போலிருக்கிறது.!" என்றார்.

"ஒன்றுமில்லை... இவாள் ரொம்ப சிநேகிதர்கள். குஷியாக ஒரு நாள் விருந்து வைத்து எல்லா ரும் சேர்ந்து ஆனந்தமாகப் பொழுது போக்கலா மென்று நினைத்தேன்."

"நம்மைக் கூப்பிட மறந்துட் டீரே!" என்றார் கோபாலன் குறும்பாக.

"நான் கூப்பிடாமல் தான் நீரே வந்து விடுகிறீரே! உம்மை நான் எதற்குக் கூப்பிடுவது?" என்று கேட்டார் கேதாரி.

சாம்புவுக்கு அங்கிருந்தவர் களைப் பார்த்ததும் தனக்குகந்த சிநேகிதர்கள் அவர்கள் அல்ல வென்று பட்டது. எல்லாரும் வைரப் பொத்தான்களும், மோதி ரங்களும், கடுக்கன்களும் அணிந்து கொண்டு, படே படே ஆசாமிகளாக இருந்தார்கள். அந்த நிசியிலும் கண் விழித்திருந்த ஒரு குழந்தை தான் சாம்புவுக்குச் சரியான சிநேகிதன் ஆனான்.

அந்தப் பயலுக்கு ஏழு வயதி ருக்கும். விஷமக் கொடுக்கு. சாம்பு வைப் பார்த்தவுடனேயே ஐந் தாறு தடவை முகத்தை வலித்து வலித்து அவனுக்கு அழகு காட்டி னான். சாம்பு வேறுபுறம் பார்த்தி ருந்தபோது அவன் மூக்கைப் பிடி த்து இழுத்து, விளாங்காய்த் தலை யில் ஒருகுட்டும் குட்டினான். பிறகு உள்ளே ஓடுவதும், அங்கிருந்த பீரோவுக் கிடையில் ஒளிந்து பாய்ச்சுக் காட்டுவதுமாக இருந் தான். சாம்புவுக்கு இதெல்லாம் வேடிக்கையாக யிருந்தது. சாம்பு இப்படிப் பொழுது போக்கி வந்த போது, விருந்தினர்கள் ஒவ்வொ ருவராக கிளம்பத் தொடங்கினார் கள். கேதாரியும் கோபாலனும் வாசற்படியில் நின்றுகொண்டு வழி அனுப்பினார்கள். கோபால னின் கண்கள் ஒவ்வொருவர் மேலும் ஊடுருவிப் பாய்ந்தது. கேதாரி ஒவ்வொருவராக கோபா லனுக்கு அறிமுகம் செய்து வைத்து அனுப்பி வந்தார்.



கிராமவாசிகளுக்கு ஒரு வரப்ரசாதம்
கிராம விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்கும் இன்ஷூரன்ஸ் எது?
திருச்சினுப்பள்ளி ராக்போர்ட்
பிராவிடெண்டு இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட் தான்
புதிய இன்ஷூரன்ஸ் சட்டத்தைஅனு சரித்து வேலை செய்து வருகின்றது.
எட்டு அணு மாத பாலிஸி முதல் ரு. 2. வரையுள்ள இலகுவான திட்டம்
சம்பளத்திலும் கமிஷனிலும் ஏஜெண்டுகள் தேவை

இவைகளுடன் விளையாடாதே



ஸ்தாபிதம் 1904
விஜயபுரம்
K.T.R
கிருஷ்ணு ஊதுபத்திகள்
மணம் மிகுந்தது. அகர், அம்பர், மட்டிப்பால், புனுகு, ஜவ்வாது ஸ்பெஷல் முதலிய வாசனைகளில் எங்கும் கிடைக்கும்.
Telegrams: 'KETIOR' Vijayapuram.
ஸோல் ஏஜண்ட்ஸ்:-
கிரிஸன் & கோ, பார்க்டவுன், மதுராஸ்

ஹால் நடுவில் வந்து சாம்பு நின்றான். அங்கே இரண்டொருவரே பாக்கி யிருந்தனர். அவர்களில் ஒருவர் சாம்புவைத் திரும்பத் திரும்பக் கவனித்துவிட்டு, "உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன்" என்றார்.

"என்னைப் பத்திரிகையில் பார்த்திருக்கலாம்" என்றான் சாம்பு பெருமையாக.

"அப்படிச் சொல்லுங்கள்! நீங்கள்தானே சாம்பு? ரொம்பக் கேள்விப் பட்டிருக்கிறேன், ஸார், உங்களைப் பற்றி" என்றார் அவர், சாம்புவின் கைகளைப் பற்றிக் கொண்டு.

"சற்று உட்காரலாமே?" என்றான் சாம்பு.

"டயம் ஆகி விட்டது. இருந்தாலும் நீங்கள் கூப்பிடும் போது எப்படி மறுப்பது?" என்று அந்த ஆசாமி ஒரு ஸோபாவில் உட்கார்ந்து கொண்டார்.

"நீங்கள் எதற்கு வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்றார் அவர் ரகசியமாக.

சாம்பு புன்னகை செய்து கொண்டான். "தெரிந்தால் சொல்லுங்களேன், பார்ப்போம்!" என்றான். சாம்புவுக்குத் தான் வந்த காரியம் என்னவென்று தெரியாது. இந்த ஆசாமியின் மூலம் அதைத் தெரிந்து கொள்ள ஆவல் ஏற்பட்டது சகஜம்தானே?

"கேதாரிலால் டெலிபோனில் பேசும் பொழுது நான் இருந்தேன். நான் அவருடைய ஷட்டகர். எனக்கு எல்லாம் தெரியும். என்னிடம் நீங்கள் தாராளமாகப் பேசலாம்" என்றார் அவர்.

சாம்பு திணறினான். "சொல்வதற்கென்ன இருக்கிறது? எல்லாம் தெரிந்த விஷயம் தானே?" என்றான் திருப்பி.

"என்ன! திருடியவனை அதற்குள் நீங்கள் கண்டு பிடித்து விட்டீர்களா?..." என்று கேட்டார் ஷட்டகர்.

"நான் கண்டு பிடிப்பானேன்? நான் போடுகிற வலையில் அவனாகவே விழுகிறான்" என்றான் சாம்பு, குருட்டாம் போக்கில்.

"என்னிடம் சொல்லலாமா அந்த ஆசாமியின் பெயரை?"

"ஏது! நீர் பெரிய திருடராயிருக்கிறீரே! என் வாயிலிருந்து வார்த்தையைத் திருடப் பார்க்கிறீர்களே!" என்று சாம்பு கூறித் தப்பித்துக் கொள்ள முயன்றான்.

அவன் கூடவிருந்த ஆசாமி அவனை விடுவதாக இல்லை. குற்றவாளி யார் என்று அறிந்து கொள்ள அவர் முயன்று கொண்டிருந்தார். இவரிடமிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ள, தனக்குத் தூக்கம் வருகிறதென்ற பாவனையில் சாம்பு ஒரு கொட்டாவி விட்டான். கோபாலனும் அப்போது அவன் பக்கம் திரும்பினார்.

கொட்டாவி என்றைக்காவது தனிப் போனது உண்டா? சாம்பு கொட்டாவி விடவே அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஆசாமியும் அகல வாயைத் திறந்து ஒரு கொட்டாவி விட்டார். கோபாலன் ஏனோ உடனே புருவத்தை நெறித்து அவரைப் பார்த்தார்!

சாம்பு இரண்டாம் தடவையாக இன்னும் பெரிய கொட்டாவி விட்டான்; அந்த ஆசாமி தம்மை அறியாமல் மறுபடி கொட்டாவி விட்டார். சாம்பு தலையைக் குனிந்து கொண்டு, தனது விளாங்காய் மண்டையை ஆட்டினான். பிறகு பக்கவாட்டில் பார்த்தான்.

அந்தச் சின்னப் பயல் பீரோ இடுக்கில் விஷமம் செய்வது அவனுக்குத் தெரிந்தது. ஒரு பெரிய கொய்யாப் பழத்தைத் தன் சின்ன வாயில் திணித்துக் கொண்டு திக்கு முக்காடிக் கொண்டிருந்தான் அவன். சாம்பு அதைக் கவனிக்கும்போதே, கோபாலன் வேகமாக வந்து, சாம்புவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர் முன்பு நின்று கொண்டார்.




**வசீகரமான தோற்றத்தை ஏன் அடையக் கூடாது?**




நீங்கள் தூய்மையான, மாசுமறுவற்ற சருமத்துடன் விளங்க — உட்புற ஆரோக்யத்தினின்றும் ஏற்படும் வெளியழகை— பிரதி இரவும் தவறுமல் இரண்டு பைல் பீன்ஸ் உட்கொள்ளுதல் என்னும் "பொன் மொழியை" பின்பற்றி அடையுங்கள். பைல் பீன்ஸ் சுத்தமான தாவர சத்து. இவை உடற் கூறுபாட்டை சீர்திருத்தி, ரத்தத்தை சுத்திகரித்து, கழிவு பதார்த்தங்களை வெளியேற்றி, உட்புற ஆரோக்யத்தை ஸ்திரப்படுத்தி அழகிய தோற்றத்தை அளிக்கிறது. எல்லா மருந்து வியாபாரிகளும் ரூ. 1/-க்கு விற்கின்றனர்.

# BILE BEANS

சயனத்திற்கு முன் பைல் பீன்ஸ் சாப்பிடுங்கள்






## கேச வளர்ச்சிக்கு

## டி.எஸ்.ஆர்.

# கோகுல்

## கூந்தல் தைலம்

மதராஸுக்கு ஸோல் ஏஜண்ட்ஸ்:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.
ஸ்டாக்கிஸ்ட்ஸ்:
As.As.ஷண்முகம் ஸ்டோர்ஸ், காரைக்குடி.

**டி.எஸ்.ஆர். & கோ. கும்பகோணம்.**

சாம்பு குனிந்த தலையுடனேயே கடைக் கண்ணால் சின்னப் பையனைப் பார்த்து, "உம்! இனி **மேல் செல்லாது! துப்பி விட வேண்டியதுதான்! உம்!"** என்றான். பிறகு கண்ணை இறுக மூடிக் கொண்டு தலையைக் குலுக்கினான்.

பக்கத்திலிருந்த ஆசாமி முஷ்டியை ஓங்கி, சாம்புவின் தலையை நோக்கி ஒரு குத்து விட்டான். அந்தக் குத்து விழுந்திருந்தால், சாம்புவின் மண்டை விளாம்பழம் போல் நொறுங்கிப் போயிருக்கும். இதை எதிர்பார்த்த கோபாலன் அவர் கையை கெட்டியாகப் பிடித்து, கன்னத்தில் பளாரென்று ஒரு அறை கொடுத்தார். அவர் வாயிலிருந்து ஒரு வைரக் கல் வெளிப்பட்டு, ரத்தின கம்பளத்தில் விழுந்து, மின்சார வெளிச்சத்தில் பபளபள பள வென்று ஆயிரம் வர்ணங்களை வாரி இறைத்தது. கேதாரி ஓடிப்போய் அதை எடுத்துக்கொண்டு "அடபாவி! என் சொந்தக்காரனா யிருந்தும் நீயா திருடினாய்?" என்றார் ஆச்சரியத்துடன்.

சாம்பு அசந்தர்ப்பமாகத் தூக்கம் கலைந்தவனாக ஒன்றும் புரியாமல் முழித்தான். கோபாலன், "சபாஷ் சாம்பு! அவன் வாயைத் திறக்க எந்த சந்தர்ப்பத்தில் கொட்டாவி விட்டீர்! இவனை நீர் தனியாக அழைத்துச் செல்லும் போதே நான் சந்தேகப்பட்டேன். இவன் கொட்டாவி விடுவதற்காக எவ்வளவு தத்ரூபமாக—நிஜம்போல்—நீரும் கொட்டாவி விட்டீர்! இவன் முதலில் வாயைத் திறந்தபோது கடை வாயில் பளிச்சென்று கல் தென்பட்டது. இரண்டாவது தடவை அது ஊர்ஜிதமாகி விட்டது. அதற்குள் நீரே 'துப்பி விடு! இனி செல்லாது!' என்று சொல்லி விட்டீர். ஸபாஷ்! ஸபாஷ்!!" என்று சாம்புவின் முதுகில் ஓங்கி ஓங்கித் தட்டினார். சாம்பு வலி தாங்காமல் துள்ளினான்.

காலில் விழுந்து ஷட்டர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். "அந்த மகாராஜாவின் பசப்பு வார்த்தையில் மயங்கி உங்களுக்குத் துரோகம் செய்துவிட்டேன். என்னை விட்டுவிடவேண்டும். சாம்புவை நான் என்னவோ வென்று நினைத்து விட்டேன்..." என்றார்.

கோபாலன் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டு, "அது உமக்கும் உம்ம ஷட்டருக்கும் எப்படியோ, நமக்குத் தெரியாது!" என்று கேதாரியைப் பார்த்தார்.

**கே**தாரி கையில் எதையோ கொண்டு வந்து கோபாலனிடம் கொடுத்தார். வழக்கமாக விலங்குகளே மாட்டிப் பழக்கப்பட்ட தமது கையினால் கோபாலன் சாம்புவின் விரலில் அதை மாட்டினார். அது ஒரு விலையுயர்ந்த நவரத்தின மோதிரம்!

கேதாரி சாம்புவின் பக்கம் வந்து, "நீங்கள் எங்கே கண்டு பிடிக்கப் போகிறீர்களென்று முதலில் எண்ணி விட்டேன். அது பெரிய அபசாரம். நீங்களோ, எல்லா விருந்தினர்களுக்கும் எதிரில் என் குடும்பத்தானாகிய இவனை வெளியாக்கி அவமானப் படுத்தாமல், அவ்வளவு பேரும் போன பிறகு திருட்டை வெளிப் படுத்தி யிருக்கிறீர்கள். இதற்குப் பிரதி நான் என்ன செய்தாலும் தகும்!" என்றார் உணர்ச்சியுடன்.

சிறிது நேரத்திற் கெல்லாம் சாம்புவை கேதாரிலாலின் சொந்த மோட்டார் அவன் வீட்டில் கொண்டு விட்டது. அவன் மறுபடி கட்டிலில் படுத்தபோது 'டாண்' என்று கடியாரம் ஒன்றரை மணி அடித்தது. தூக்கம் கண்ணைச் சுழற்றியது. தலையைச் சார்த்திய மூன்றாவது நிமிஷம் அவன் குறட்டை விடத் தொடங்கினான்.

**ம**றுநாள் காலையில் சாம்பு எழுந்தபோது, இரவு நடந்த சம்பவங்கள் அவனுக்குச் சொப்பனம் என்றே தோன்றின. நடந்ததெல்லாம் உண்மையே என்று நம்பிக்கை உண்டாக்குவதே போல் அவன் கையில் நவரத்தின மோதிரம் பளபள வென்று ஜ்வலித்தது!

## "பகுத்தறிவு"ப் போட்டி—324

ரூ 1500
முதற் பரிசு ரூ 1000
இரண்டாம் பரிசு ரூ 500


பிரவேசக் கட்டணம் கூபன் ஒவ்வொன்றிற்கும் அணா எட்டு.

**முடிவு தேதி 13-3-1943**

முதற் குறிப்பு (இடமிருந்து வலமுள்ளது) அருமை மாப்பிள்ளையானாலும் அதிக நாட்கள் மாமனார் வீட்டில் தங்கி யிருந்தால், இது ஏற்படத்தான் செய்யும் என்றிருக்கிறது. நெ. 1. கட்டத்தி லிருந்து இடமிருந்து வலமாக நான்கு வெள்ளைக் கட்டங்களிருக்கின்றன. ஆகவே நெ. 1. குறிப்பிற்குச் சரியான வார்த்தை நான்கு எழுத்துக்கள் கொண்டது என்பது தெரிகிறது. சலிப்பு சரியான விடை. வெள்ளைக் கட்டத்திற் கொரு எழுத்து வீதம் எழுதப்பட் டிருக்கிறது. இதுமாதிரி எல்லா விடைகளையும் கண்டு பிடிக்க வேண்டியது.

(மற்ற விதிகள் முன்பு இருந்தது போல்தான்)

"பகுத்தறிவு"ப் போட்டி—324




பெயர்.

விலாசம்

ம. ஆ. ர்ஜி ஷெ                கூபன் நெ.—

## "பகுத்தறிவு"ப் போட்டி - 324—குறிப்புகள்

### இடமிருந்து வலம்

1. அருமை மாப்பிள்ளையானாலும் அதிக நாட்கள் மாமனார் வீட்டில் தங்கியிருந்தால், இது ஏற்படத்தான் செய்யும்.

5. இதனால் ஸ்திரீகள் ஆடவர்களை வசப்படுத்த முயலுகிறார்கள்.

7. உங்களுடைய.

8. ...... மரம் கண்ட தச்சன், ஒரு மரமும் வெட்டமாட்டான்.

9. இதற்காக மலைகளுக்குப் போவார்கள் பலர்.

10 இது சரியாகக் கிடைக்காததால், ஏழைகள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

11. இது இல்லாத மனுஷர்களிடம் பேசத் தோன்றுமா?

14. பூமி.

16. பூக்கடைக்குள் நுழையும் பொழுதே '......' என்று மணம் வீசும்.

18. குடும்ப சொத்தில் ஒரு இதை வேண்டி வழக்காடும் பிள்ளைகள் பலரிருக்கிறார்கள்.

20. இது கொதித்து விட்டால், அரிசியைக் களைந்து போடவேண்டியதுதான்.

21. நீதிஸ்தலத்திலே கேட்ட இதற்கு மட்டும்தான் பதில் சொல்ல வேண்டும்.

22. இதை சரியாக்கிப் பாடினால், கேட்க இனிமையாகத்தானிருக்கும்.

24. இது ஜாஸ்திதான்; ஆனாலும் கொஞ்சம் குறை இல்லாமலில்லை.

25. பார்த்தசாரதிப் பெருமாள், கோவில் கொண்டிருக்கிறார் இங்கே.

---

### மேலிருந்து கீழ்

1. சமீபத்திலே சென்னையிலே சங்கீத வித்வத் சபையார் ஒரு இது கூட்டி, சில வித்வான்களுக்கு 'சங்கீத கலா நிதி' என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

2. சிவன் கோவிலில் இருக்குமிது.

3. சுவாமிக்கு தீபாராதனை செய்ய உபயோகமாகும் இது, கொறுங்கிப் போய்க் கிடக்கிறது.

4. பறவை.

5. சில காலங்களில்தான் இந்தப் பட்சிக்குக் குஞ்சு பிறக்கும்.

6. யுத்தம் என்றால் எல்லோருக்கும் இதுதான்.

10. தினுதினுஸான இது செய்யவேண்டுமென ஆசைப்படுவது ஸ்திரீகளுக்குள்ள சுபாவமாகும்.

12. சிலர் எப்பொழுது பேசினாலும் இப்படியாகவே பேசுவார்கள்.

13. கல்யாண வீடு என்றால் இது இல்லாமலிருக்குமா?

15. இதோடு செய்யப்படும் காரியங்களில் வெற்றி காண்பது சிரமமல்ல.

16. இதற்காகப் பல தியாகங்களைச் செய்திருக்கிறார்கள் சிலர்.


17. கையிலே திரிசூலத்தை வைத்திருப்பதால், சிவனுக்கு ஏற்பட்ட பெயரிது.


19. தவறு செய்யும் குழந்தைகளை ......தல் தவறு.

20. கண்ட இடத்தில் ......... பாராட்டத் தக்க விஷயமல்ல.

21. இது பெரிதா, மதி பெரிதா என்று பார்க்கத் தீர்மானித்து, மதியே பெரிதென ருசுப்படுத்தினான் மார்க்கண்டன்.


23. தமிழ்நாடு பெற்றெடுத்த பிரபல கவி.





## "பகுத்தறிவு" —318

### சரியான விடை




We hereby certify that the above is the solution in original deposited with us by Ananda Vikatan on 28.12.42 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For THE INDIAN BANK, LTD.

3/2/43

Secretary,
Asst. Secretary

முதற் பரிசு

# ரூ. 1000

40 பேர்களுக்கு

## தலைக்கு ரூ. 25-0-0

ஃ

சரியான விடை அனுப்பிய கீழ்க் கண்ட 40 நபர்களுக்கும் முதற் பரிசுத் தொகையான ரூ. 1000-மும் சமமாகப் பங்கிடப்பட்டு தலைக்கு ரூ. 25-0-0 வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

முதற் பரிசுத் தொகை 6-2-43 அன்று அனுப்பப் பெற்றது.

இரண்டாவது பரிசு பெற்றவர்கள் ஜாபிதா அடுத்த வார நாரதரில் வெளிவரும்.


(1) ஏ. ஆர். வேதநாதன், 63, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. (2) டி. செல்லப்பெருமாள், 75, 76, பூனமல்லி ஹை ரோட், கீழ்பாக்கம். (3) கே. டி. நரஸிம்மன், 11, பேயாழ்வார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி. (4) கிருஷ்ணம்மாள் c/o ஆர். வி. அய்யர், ஸீனியர் லைன் இன்ஸ்பெக்டர், ஷோலாப்பூர். (5) பி. என். குஞ்சிதபாதம், 75, வடக்கு ரத வீதி, சிதம்பரம். (6) எஸ். சிதம்பரம் பிள்ளை, பிரசிடெண்ட், பஞ்சாயத்து

(தொடர்ச்சி 63ம் பக்கம் பார்க்க)

# ரூ. 1500

## பரிசு பெற்றவர்


**ஸ்ரீ டி. சுப்ரமண்ய அய்யர்,**
பி. ஏ., எல். டி.,
மன்னார்குடி.



'பகுத்தறிவு'ப் போட்டி 316ல் ரூ. 1500 பரிசு பெற்றார் இவர்




## "பகுத்தறிவு"ப் போட்டி—320





பெயர்.
விலாசம்.
ம. ஆ. ரசீது கே.
கூபன் தே......

## "பகுத்தறிவு"ப் போட்டி—324




பெயர்.
விலாசம்.
ம. ஆ. ரசீது கே.
கூபன் தே......




YOU PAY FOR GOOD ROADS WHETHER YOU HAVE THEM OR NOT. YOU PAY MORE IF YOU DON'T HAVE THEM.

C.M.I. DISTRIBUTORS OF A.C.C. DALMIA CEMENTS


Have you obtained a copy of the SPECIAL ROADS NUMBER of "THE INDIAN CONCRETE JOURNAL". If not remit annas 10 (to cover cost and postage) to The Manager, I.C.J. (A.V.) P. O. Box 138, Bombay.



(60ம் பக்கத் தொடர்ச்சி)

போர்டு, கள்ளக்குறிச்சி. (7) டி. ஜெயலக்ஷ்மி, 1886, தெற்கு வீதி, தஞ்சை. (8) ஜெ. மகாலிங்கம், 17, விசித்திர ராயர் அக்ரஹாரம், மாயவரம். (9) குஞ்சம்மாள், c/o டி. என். மணி அய்யர், ஸ்ரீ வெங்கட்டரமண கபே, அய்யம்பேட்டை. (10) கமலாம்பாள், 9, ஜவுளிக்காரத் தெரு, திருவாரூர். (11) எஸ். எம். ஜெயலக்ஷ்மி, (மைனர்) g/o எஸ். மாரிமுத்து நாடார், சிவன் சன்னதி வீதி, பொறையார், (12) ஜி. மங்களம், c/o மெடிகல் ஆபீஸர், திருவடமருதூர். (13) பி. எஸ். சுவாமிநாதன், பழமார்னேரி (14) ஜி. எஸ். அய்யங்கார், பி. டபிள்யூ. டி., ஆர். சி. டிவிஷன். திருச்சி. (15) ஆர். பாலசுப்ரமணிய அய்யர், கிளார்க், லோகோபோர்மன் ஆபீஸ், திருச்சி. (16) ஆ. மாரியப்பக் கோனார், நெல்வியாபாரம், அ. சி. ரு. ரைஸ்மில், மந்தை, திருச்சி. (17) வி. கே. நரசிம்மன், 84, ஆண்டார் தெரு, தெப்பக்குளம். (18) கே. எஸ். எம். அய்யர். நடராஜா லஞ்ச் ஹோம், லால்குடி. (19) கே. என். வெங்கடராமய்யர், டீச்சர், போர்டு ஹைஸ்கூல், லால்குடி. (20) கே. எம். வெங்கட்டராம அய்யர், கிருஷ்ணராயபுரம். (21) எம். கே. எஸ். நாகய்யன், 16, தொட்டியன் கிணற்று தெரு, மதுரை. (22) என். எஸ். ராமலிங்கய்யர், மால் 5-வது தெரு, மதுரை. (23) நீலமேகம், ஜா. சேஷய்யர். 9மால், 7வது தெரு, மதுரை. (24) கே. பத்மநாபன், 44, கோபால கொத்தன் வீதி, மதுரை. (25) எஸ். ராஜகோபாலன், 40, கோபால கொத்தன் வீதி, மதுரை. (26) எஸ். பழனிசாமி, c/o கே. கே. பழனிக்குமாரு நாடார், மளிகை, உசிலம்பட்டி. (27) வே. ராமநாதன், சோதிடம், மாறு மதுரை. (28) எம். சோமசுந்தரம், கலெக்டர் ஆபீஸ், திருநெல்வேலி. (29) கே. எ. சீதாராமன், 19, தெப்பக்குளம் தெரு, மேலூர். (30) வி. எல். வெங்கிட்டராமய்யர், சிந்தாமணி, புளியங்குடி. (31) வி. அய்யாவய்யர், பிரானூர். (32) கே. வி. விஸ்வநாத பாகவதர், வெங்கிட்கிருஷ்ணன் வீதி, ஆர். எஸ். புரம். (33) செல்லம்மாள், மாங்கோ. குரோவ், போத்தனூர். (34) எஸ். தஸ்தகீர் சாயபு, முதவல்லி இப்ராஹிம் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (35) எம். பி. முத்துசாமி, பாண்டமங்கலம், சேலம். (36) அ. பாலசுப்பிரமணியன், 10, வெள்ளாள வீதி, புதுவை. (37) ஆர். சொக்கலிங்க முதலியார், 20, சிகார் ஷாப், மார்க்கட், காரைக்கால். (38) சி. காசிலிங்கம், தலைவாசல் வீடு, கிருஷ்ணன் கோவில் தெரு, வடசேரி. (39) கே. எஸ். சுப்பையா அய்யர், வலிய சாலை தெரு, திருவனந்தபுரம். (40) சுந்தரம்மா, 4, ராம நிவாஸ், உத்திராதி மடம் தெரு, பஸவன்குடி.

——



# BAZAAR & OTHER ATTRACTIONS




**வலியை விரைவில் விரட்டுங்கள்**
கீல்வாதம், இடுப்புவலி, இருமல், தொண்டைப் புண், காயங்கள், சுளுக்கு, குளிரினால் உண்டாகும் சிரங்கு இவைகளைக் குணமாக்க எப்போதும் ஒரு பாட்டில் பெயின் கில்லர் வைத்திருங்கள்.

**பேர்ரி டேவிஸ் பெயின் கில்லர்**
நூறு வருஷங்களுக்கு மேலாக எலலா மருந்து வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது.

PERRY DAVIS'
VEGETABLE
**Painkiller**
TRADE MARK

இந்த ஆச்சரியமான மருந்தை உங்கள்
**மலேரியா**
கட்டிகளுக்கு
உபயோகித்துப் பாருங்கள்
கெமிஸ்டிடமும்கடைகளிலும் கிடைக்கும்




**D.D.D. PRESCRIPTION**
**டி.டி.டி. மருந்துவிதித்தல்**

**நரையை ஒழியுங்கள்**



தலை மயிர் நரைத்திருக்கும் பொழுது டாக்டர் அம்பருடைய கரை பிடிக்காததும், இயற்கையானதுமான ஐவரி பிளாக் (IVORY BLACK) சிறந்தது.
ரிஜிஸ்டர் நெ. 1998.

Appah & Co., Madras.
D. Syed Oosman, Bangalore.
N. Desai Gownder, Coimbatore.
Perry & Co., Grant Rd. Bombay.

**மாத விடாய் :** 3, 4 மாதங்களாகப் போக்குத் தடைப்பட்டிருந்தாலும், கருத்தரித்திருந்தாலும் குமாரி (Regd.) அதிசயிக்கும் சில மணிக்குள் சுகமான போக்களிக்கிறது. மிகவும் உயர்ந்தது. கொஞ்சமும் ஹானியற்றது. பிரியப்பட்டால் கருத்தரிக்காமலும் பாதுகாக்கிறது. நாடெங்கும் ஆயிரக் கணக்கானவர்கள் உபயோகித்து நன்றி கூறுகிறார்கள். விலை ரூ. 3-9 (தபால் செலவு உள்பட).



**Mrs. P. DEVEE, F.D.S.,** (Gold Medalist)
9-3, Chanditola (Russa) Tollygunge, CALCUTTA.



**குழந்தையின் புனர்ஜன்மம்**

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளுக்கு
நிச்சய குணமளிப்பது
பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" ஒன்றே
Dr. பிள்ளை பாபய்ய பாத்ருடு & பிரதர்
11, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், மதராஸ்
டெலிபோன் நெ. 86257




Edited, Printed & Published by S. S. Vasan at the Ananda Vikatan Press, 140, Pophams Broadway, Madras.



208550








உயர்ந்த முறையில் நறுமணம் ஏற்படுவது தவறாது விநோலியா ஒயிட் ரோஸ் சோப்பை உபயோகிப்பதால்தான். இந்த அழகிய மணமுள்ள வெண்ணிற சோப்பை ஒரு முறை உபயோகித்தவுடன் அழகிய ரோஜா மலர்களின் மணம் உங்கள் சருமத்திலிருந்து வெகு நாழிகை வரை நீங்குவதில்லை. அந்த மணம் எங்கும் பரவக்கூடியது— மனோகரமானது. புத்துயிர் அளிக்கக் கூடியது. உங்கள் சருமத்திற்கு ஏற்றது. அழகாக இருக்க விரும்புவோர் பலர் இப்பொழுது விநோலியா ஒயிட் ரோஸ் சோப் உபயோகிக்கிறார்கள்.

**விநோலியா ஒயிட் ரோஸ் சோப்பு**

VWR. II—50—85 TM
VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

Registered No. M. 2135

28.1.60

11/3/81

1432/88

3897/

1.2.83





கவனக்குறைவினால் அழுக்கின் மூலம் ஆபத்தேற்பட்டால் அது எவ்வளவு பரிதாபம்! குழந்தையை அழுக்குப்படாமல் வைத்துக் கொள்வது சிரமம்தான்— ஆனால் அழுக்கின் ஆபத்துகளினின்றும் அவளுக்கு 'லைப்பாயி'னால் பாதுகாப்பு அளிக்கலாம். அழுக்கு கிருமிகளை வளர்க்கிறது. அழுக்கிலுள்ள, கிருமிகளால் வியாதிகள் ஏற்படலாம். கிருமி நாசன லைப்பாய் சோப், அதன் ஆரோக்ய சகதி மிக்க நுரையினால் ஆபத்தைப் போக்குகிறது. அழுக்கின் ஆபத்தினின்றும் இவளைப் பாதுகாக்க ஆரோக்கிய லைப்பாய் முறையைப் போதியுங்கள்— போஜனத்திற்கு முன்பும், விளையாட்டிற்குப் பிறகும், தினமும் லைப்பாய் சோப் உபயோகித்துக் கழுவவேண்டும் பிறகு உங்களுக்குக் கவலை யில்லை.

L. 35-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED